

# ரமணோதயம்

ஏப்ரல் 2018
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20

**SEMINOR**
**6TH MAY SUNDAY 2018**
**AT**
**TATTVALOKA**



**ARADHANA**
**SUNDAY 13TH MAY, 2018**
**RAMANA KENDRA,**
**MYLAPORE**

Om Namo Bhagavathe Sri Ramanaya

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள்

## 68வது ஆண்டு மஹாராதனை

## RAMANA KENDRA TRUST

41, Alarmelmangapuram, Mylapore, Chennai - 600 004.
Tel : 24611397 Cell : 99404 18375

# ARADHANA CELEBRATION

**- 13th May 2018, Sunday**

**MORNING**

6.00 a.m. : நாதஸ்வரம்
7.00 a.m. : Mahanyasam, EkadasaRudrajapam, Abhishekam
10.00 a.m. : Sri Ramana Sahasranamam Archana
11.00 a.m. : Tamil Parayanam: "உள்ளது நாற்பது, அக்ஷர மணமாலை,"
12.15 p.m. : Annadanam, Deeparadhana

**Evening**

4.00 p.m. : ப்ரதோஷ பூஜை
5.45 p.m. : Sri Ramana Maharshi Mahatmiyam "
Harikatha by Kalaimamani Smt Gowri Rajagopal
6.45 p.m. : 'Thiru Veedhi Ula' of Sri Bhagavan around Mada Veedhies, Mylapore
7.15 p.m. : "Aksharamanamalai" - Group chanting
8.47 p.m. : Merger of Sri Bhagavan in Arunchala -
(ஆன்மாவாம் அருணாசலனோடு அண்ணல்
ரமணர் ஒடுங்கிய தருணம்)

**(Donations towards Annadhanam (Rs. 40,000) EkadasaRudrajapam (Rs,8000), Flowers to Bhagavan and decorations (Rs,10000/-) Rathayathra (Rs.25000/-) Pandal, Lighting (Rs.10000/-) are gratefully accepted in part or in full. Donations are exempt u/s 80G of IT Act, Cheques / drafts may be drawn in favour of Ramana Kendra Trust.**

**(Laksharchana : From Monday 7th to Friday 11th May, 2018)**

**MAHA POOJA On 7.6.2018, Thursday 8.30 to 10.30 a.m.**

**COW LAKSHMI POOJA On 24.6.2018, Sunday 7.30 to 9.30 a.m.**

**9.30 a.m. Music by 'Shivani Kumar' diciple of 'Deepa Srinivasan'**

உதயம் 17 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2018

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2018


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | பேரமைதி நிலவிய திருநாட்கள் -7&8 | மௌனி சாது | 16 |
| 3 | திருக்குறளும் ரமணரும் | சு. பரமேஸ்வரன் | 25 |
| 4 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் பகுதி 10 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 34 |
| 5 | மதில்மேல் அகந்தை | பிர. கிரிதர ஜகதீஷ் | 44 |
| 6 | ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை | | 49 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 58 |
| 8 | வளைந்த வில்லும் பாயும் கணையும் | கௌதமன் | 59 |
| 9 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 63 |
| 10 | அன்னை அழகம்மையார் | | 67 |
| 11 | செய்திகள் | | 76 |



Front Cover © Photograph by Dev Gogoi

Back Cover © Photograph by Markus Horlacher

# ஆசிரியர் உரை

## அனைத்துமாய் பரந்த நம் பகவான்

*'பகவான் எங்கே உள்ளான்? எப்படி உள்ளான்?' என்று கேட்பவர்க்கு அவனது முழுவடிவினைச் சுட்டிக் காட்ட இயலாது. அவன் நம்மால் சுட்டிக்காட்ட இயலாத பரம்பொருள். பகவான் என்ற சொல்லின் பொருள் என்ன? நிறையப் பொருள் படைத்தவன் 'தனவான்'. நிறையப் பலம் கொண்டவன் 'பலவான்'. நிறைந்த நற்குணங்கள் கொண்டவன் 'குணவான்'. அதேபோன்றே 'பகவான்' என்ற சொல்லிற்கு 'பகம்' நிறைந்தவன் என்பது. ப$^4$க: என்றால் அளவற்ற செல்வம், அளவற்ற ஞானம், அளவற்ற அருள், அளவற்ற தேஜஸ், அளவற்ற வீர்யம், அளவற்ற ஆற்றல் ஆகிய ஆறு ஐஸ்வரியங்களும் பொருந்தியவன் என சம்ஸ்கிருத மொழி நூல் பகர்கிறது. ப$^4$க: என்ற சம்ஸ்க்ருத வேர்ச்சொல். இந்த ஆறு நலன்களையும் குறிக்கிறது.*

*இவை அனைத்தும் நம் பகவானுக்குப் பொருந்துவதைக் காண்கிறோம். அவரது அருள் அளவற்றது.*

*"தேடாதுற்ற திருவருள் நிதியம்" அவர் (மணமாலை) அவரது அருள்விகாசம் தன்னிடம் சரண் புகுந்த மானிட அன்பர்கள் மட்டுமின்றி, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் அனைத்தையும் அரவணைப்பது. கிருஷ்ண பிக்ஷுவின் நூலில் நாம் முன்பே கண்டபடி, தன்னையே*

பற்றுக்கோடாய் சரண்அடைந்த அன்பர்தம் பாவ புண்யங்கள் அனைத்தையும் மொத்தமாய் தானே ஏற்று, கடைத்தேற்றிய பேரருட் காட்சியினைக் கண்டோமல்லவா! 'தேவிகாலோத்தரம்' நூலின் 70ஆவது பாடலில் கூறியபடி, இலை, மலர், துளிர்கள், பூஜைக்காகக் கூடப் பறித்து தாவரங்களுக்குத் துன்பம் தரக் கூடாது என்ற பேரருட்கடல் அல்லவா பகவான்?

*பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி*
*அப்பனிமலர் எடுக்க மனம் நண்ணேன்*

என்ற தாயுமானவரின் கனிவுள்ளத்தைத் தானே வாழ்ந்து காட்டியவர் அல்லவா பகவான்!! கூட்டிலிருந்து வீழ்ந்து விரிசல் பட்ட முட்டையையும் கூடத் தன் திருக்கரத்தால் ஏந்தி, தடவிக்கொடுத்து, அதனைத் தனது மேல் துணியால் மூடி, பறவைக் குஞ்சை உயிர்ப்பித்த பரம தயாநிதி அல்லவா பகவான்! இதுவே அளவற்ற அருள்.

*கறவையே நாடிக் கருகியே ஓடும்*
*கன்றுபோல் கழல் அடைவோரை*
*விறலினால் ஓங்கும் விழியினால் வினையின்*
*வீறுதீர்த்து அருள்செய்வேங் கடனே.*

*(முருகனார், அதெந்துப் பத்து)*

என முருகனார் பகவானின் வரம்பற்ற அருளைப் பாடுகிறார்.

"ப$^4$க:" என்பதன் மற்றொரு பொருளான அளவற்ற ஞானம் என்பதற்கும் பகவான் விளக்கமாய்த் திகழ்கிறார்.

*கஸ்மின் விக்$^3$ஞானதே ஸர்வமித$^3$ம் விக்ஞானம் ப$^4$வதி*

'எந்த ஒன்றை அறிந்துவிடின் அகிலத்தில் உள்ள அத்தனை ஞானமும் வந்துறுமோ, அதை அறிதல்' என்று வேதம் கூறியபடி, மிகச் சிறு வயதிலேயே பள்ளிப்படிப்பினை விட்டாலும், தனது உண்முக நோக்காலேயே ஆத்மஞானம் அடைந்து, அதன் மூலம்

மொழிஞானம், பௌதிக ஞானம் அனைத்துமேயே தெள்ளத்தெளிவாக அடைந்தபின் பகவான் காவ்யகண்டர் போன்ற சம்ஸ்க்ருத வல்லுநர்கள், முருகனார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள், சாமர்செட் மாம் போன்ற மேனாட்டு அறிஞர்கள், தத்துவ ஞானியர் பலர், அறிவியல் விஞ்ஞானியர் அனைவரையுமே அதிசயிக்க வைக்கும் அளவற்ற ஞானம் பெற்றவர் பகவான்.

“ப$^{4}$க:” என்பதன் மூன்றாவது பொருளான அளவற்ற செல்வம் என்பதற்கும் உதாரண புருஷர் பகவான். அளவற்ற ஞானகதியைத் தேடாமலே அடைந்தவர் பகவான்.

‘தேடாதுற்ற திருவருள் நிதி’ என அருணாசலனையே வழுத்துகிறார் பகவான். தான் அளவற்ற ஞானநிதியை அடைந்ததோடு, அதனைத்தான் மட்டுமே வைத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் வாரி வழங்கிய திறனை முருகனார் பாடுகிறார்.

என்செய்த நல்வினையோடு ஏழேழ் தலைமுறையோர்
முன்செய்த நல்வினையான் முற்பட்டு நாயேற்கு
மன்செய்த தண்அளியான் மாவேங் கடரமணன்
பொன்செய்த பூங்கழற்கே போந்தூதாய் கோத்தும்பீ

(ரமண சந்நிதி முறை, 1741)

“நான் செய்த நற்கருமங்களின் பலன்களோடு, என் முந்தையோர் ஏழேழ் தலைமுறைகளாகச் செய்த நல்வினைகளின் பயனாக இழிந்தவனாகிய எனக்கும் எல்லையற்ற ஞானச் செல்வத்தை அருளியவன்” என்கிறார் முருகனார்.

“ப$^{4}$க:” என்னும் சொல்லின் அடுத்த பொருளான அளவற்ற ஆற்றல் என்பதற்கும் இருப்பிடமாகத் திகழ்கின்றார் பகவான். அப்பர் சுவாமிகள் இறைவனது

அளவற்ற ஆற்றலைத் திருத்தாண்டகத்தில் எடுத்து இயம்புகிறார்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்துஅறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றுஎன்
தாயானைத் தவம்ஆய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே
(ஆறாம் திருமுறை, பதிகம் 19, பாடல் 8)

இறைவன் நம் நாசொல்லும் சொல்லில் உள்ளான். நம் உள்ளத்தில் உள்ளான். உள்ளத்தில் எண்ணமாக அவனே நிரம்பி உள்ளான். நாம் எண்ணுவதையெல்லாம் முடிக்கும் பேராற்றல் மிக்கவும் அவனே. தூய்மையின் சிகரம் அவன். சுடர்கின்ற நிலவைத் தலையில் ஏற்றவன். தன்னைத் தொடர்ந்து வரும் எனக்குத் தாய்போல் அருள் புரிபவன். விஷய இன்பங்களிலேயே மூழ்கியுள்ள தேவரால் அறியப்படாதான் என்று இறைவன் ஆற்றலைப் பாடுகிறார் அப்பர் சுவாமிகள். இவை அனைத்தும் பகவானுக்கும் பொருந்தும்.

“ப$^4$க:” என்ற சொல்லின் நான்காவது பொருளான அளவற்ற தேஜஸ் என்பதும் பகவானுக்கு மிகப் பொருந்தியதே. அவர் தம் அன்னையின் கர்ப்பத்தில் இருக்கும்போதே அவர்தம் அன்னை தமது வயிற்றில் பெரும் தேஜாக்னியை சுமப்பதாக பத்து மாதமும் உணர்ந்தார். அந்தப் பெரும் தேஜஸ் வடிவினை நோக்கியதால் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தை முருகனார் எழிலுறக் கூறுகிறார்.

எழிலுக்கு ஒருபேர் எல்லை எனவே
இமையாது என் கண் இணை நோக்க
குழகக் கோலம் கொண்டு என்உயிரைக்
கோல விழியால் குழைவித்தான்

*விழவுக்கென மெய்அடியவர் வேட்டை*
*மிக்கூர கனவேங்கடவன் கட்டழ*
*குக்கேதான் வயப்பட்டால் போன்று*
*அடிமைப்பட்டேன் அற நானே!*

பொருள்: தேஜஸுக்கே ஓர் எல்லையாய்த் திகழும் ரமண பகவானின் எழில்கோலம் கண்டு என் கண்ணும் இமைக்காது நான் நோக்கியபோது என் கண்களுடன் பிணைந்த தன் திரு நயனங்களால், என் அகந்தையைக் கரைத்து அழித்தான். அந்தத் தேஜஸில் 'நான்' அழிந்த நிலை ஒரு திருவிழாவாகவே ஆனது. நான் அவருக்கே அடிமை ஆனேன் என்கிறார் முருகனார்.

இறைவனைத் 'திகழ் ஒளி' - நிலைத்த தேஜஸ் என்று திருமுறையும் அழைக்கிறது.

*அரியானை அந்தணர்தம் சிந்தை யானை*
*அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்*
*தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்*
*திகழ்ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்*
*கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்*
*கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற*
*பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்*
*பேசாத நாளெல்லாம் பிறவா நாளே*

(திருமுறை 6, பதிகம் 1, திருத்தாண்டகம் 1)

'தேஜஸ்' என்ற ஓர் உயர்பண்பு மட்டுமின்றி பகவானின் கல்யாண குணங்கள் அனைத்தையுமே எடுத்துரைக்கின்றது. இந்தத் திருமுறை திருத்தாண்டகப் பாடல் உணர்வதற்கு அரியவனை, சாதகரின் சிந்தனையில் தியானப் பொருளாய் இருப்பவனை, அணுவிற்கும் அணுவாயும், அப்பாலுக்கு அப்பாலும் இருப்பவனை, வெறும் அறங்களும் மட்டுமே கொண்டு அறிய முயல்பவர்க்குத் தெரிய முடியாதவனை, தன்னிடம் பூர்ணமாக சரண் அடைந்தவர்க்கு தேன்போலும், பால்போலும், இனிமையாய் இருப்பவனை, தேஜஸுடன் ஒளிர்கின்ற

ஜோதியை, அமரர்க்கும் தலைவனாய் அமைந்தவனை, திருமாலாகவும் பிரம்மா ஆகவும் விளங்குபவனை கனவாகவும் காற்றாகவும் ஒலிக்கின்ற கடலாகவும் பெருமை நிரம்பிய மலையாகவும் உற்ற நம் பகவானைப் பற்றிப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாட்களே ஆகும் அல்லவா! 'குலவரை' என்று திருமுறை இலகும் அருணைமலையே அல்லவா நம் பகவான்!

"ப$^4$க:" என்னும் சொல்லின் ஐந்தாவது பொருளான அளவற்ற 'வீர்யம்' என்பதையும் பகவான் வெளிப்படுத்துகிறார். வீர்யம் என்பதை அச்சமூட்டும் ஒன்றினை அஞ்சாது எதிர்கொள்ளுதல். அனைவருமே அஞ்சுகின்ற ஒன்று மரணம்தான். பதினாறு வயதிலேயே மரணத்தை நேருக்குநேர் சந்தித்து சிறிதும் அஞ்சாது சில விநாடிகளிலேயே மரண பயத்தை வெற்றிகொண்ட பெரும் வீர்யம் படைத்தவர் அல்லவா பகவான்! உள்ளது நாற்பது நூலின் இரண்டாவது பாயிரச் செய்யுளாக வரும்

மரணபயம் மிக்குள அம்மக்கள் அரணாக
மரணபவம் இல்லா மஹேசன் – சரணமே
சார்வர்தம் சார்வொடுதாம் சாவுற்றார் சாவெண்ணம்
சார்வரோ சாவா தவர்

பொருள்: மரணபயம் தீவிரமாகப் பற்றிய சாதகர்கள் அவ்வச்சம் நீங்கும்படி, பிறப்பு-இறப்பு இரண்டையும் கடந்த பாதுகாப்பு அரணாக விளங்கும் இறைவனையே சரண் அடைகுவர். அத்தகு பூரண சரணாகதிக்குப்பின் எல்லாப் பற்றுக்களும் அற்று, த்வைத பாவம் முற்றிலும் ஒழிந்து, ஆத்மாவுடன் ஒன்றிய நிலை அடைவர். அத்தகைய ஜீவன்முக்தர்களை மீண்டும் மரணபயம் வந்து பற்றுமா?

இங்ஙனம் எல்லாவற்றினும் தலையாய அச்சமாகிய மரண பயத்தையே அழித்து ஒழிக்கும் பெரும் வீர்யம் படைத்தவன் நம் உட்பகை-வெளிப்பகை

அனைத்தையும் அழிக்கும் வீர்யம் படைத்தவன் பகவான். உண்மையான ஆண்மை படைத்தவன். கம்பர் கூறும் அறம் ஆண்மைக்கு உதாரண புருஷன்.

உடைந்தவர்க்கு உதவான் ஆயின், உள்ளது ஒன்று ஈயான் ஆயின்

அடைந்தவர்க்கு அருளான் ஆயின் அறம் என்ஆம்? ஆண்மை என்ஆம்?

(வீடணன் சரணாகதிப் படலம்)

இந்த மூன்று வீர்ய குணங்களுமே முழுதுமே நிறைந்தவன் பகவான் மனம். உடைந்து வந்த அடியார் அனைவருக்குமே ஆன்ம விசார வழி காட்டி உதவியவன் தன்னிடம் உள்ள பெரும் ஞானத்தையே அனைவருக்கும் ஈந்த வள்ளல், 'ஒன்று' என்ற ஆத்ம ஞானத்தைத் தந்தவன், சரண் என வந்தார் அனைவருக்கும் அருள் தந்தவன் – அவனே ஆண்மை வீர்யத்தின் சிகரம்.

இறுதியாக வரும் ஆற்றல் என்பதற்கும் நிலைக்களன் பகவானே. சாதாரணமாக ஆற்றல் வெளி எதிரிகளை வெற்றி கொள்வது. பேராற்றல் என்பதோ ஒருவர் நெஞ்சத்தே குடிகொண்டுள்ள தீயகுணங்களை வேரொடு களைந்து அழிப்பதே. நம்மை ஆசை மயக்கத்தில் எரித்து தன்வயப்படுத்தும் ஐம்புலன்களை அடக்கி வெற்றி கொள்வதே பேராற்றல்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்
ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்

என்கிறார் வள்ளுவர். 'பொறி' எனப்படும் ஐம்புலன்களை வெற்றிகொள்ளும் ஆற்றல் படைத்தவனே ஜிதேந்திரியன்.

தத்துவராய சுவாமிகள் மோஹவதைப் பரணி எனப் பெயர்பெற்ற ஞானநூலை இயற்றினார். பரணி என்பது ஆயிரம் யானைகளைப் போரினில் கொன்ற பேராற்றல் வாய்ந்த பெருவீரன் மீது பாடப்படுவதாகும். தத்துவராய

*சுவாமிகள் தமது சத்குருவின்மீது அவர் ஐம்புலன்களின் மீது கொண்ட வெற்றியைப் பாடி பரணி நூல் இயற்றினார். அங்கிருந்த புலவர்கள் 'பரணி' என்னும் இலக்கியம் ஆயிரம் யானைகளைப் போரில் மாய்த்த பெருவீரன் மீதுதான் பாடப்படவேண்டும். அதனை ஒரு துறவியின்மீது பாடுவது தகாது என்று கூறினார்கள். தத்துவராயர் என் குருவின் திருவருளால்தானே என் உள்ளத்தில் எழுந்த காவ்யம் இது. இவ்வாறு ஞானியின்மீது பரணி பாடுவது பொருந்துமா என்பதை அவர் சந்நிதியிலேயே அறிந்து கொள்ளலாமே என்று கூறி புலவர்களுடன் சத்குருவின் ஆஸ்ரமத்திற்குச் சென்றார்.*

*அங்கே சத்குருநாதர், பீடத்தின்மீது சுத்த மௌனத்தில் அமர்ந்து வீற்றிருந்தார். தத்துவராயருடன் சேர்ந்து, புலவர் அனைவரும் அவர்முன் அமர்ந்தனர். ஆரம்பத்தில் இவ்வாறு பரணி பாடியது பொருத்தமா? அல்லவே! என்ற பல்வேறு எண்ண அலைகள் மனதில் முந்தின. சிறிது சிறிதாக சத்குருவின் சந்நிதி விசேஷத்தால் அவர்களது எண்ண அலைகள் அடங்கி, அடங்கி இறுதியில் பூர்ண மௌனம் நிலவியது.*

*பலமணி நேரம் கழித்து சத்குரு, சமாதி நிலையில் இருந்து கண்விழித்தார். அடங்கியிருந்த புலவர் மனங்களும் விழித்தன. எது உண்மையான வெற்றி என்று உணர்ந்த புலவர்கள் "ஆயிரம் யானைகளை அடக்கி வெற்றி கொள்வதைக் காட்டிலும், ஆயிரக்கணக்கான எண்ணங்கள் எழும் மனத்தை அடக்கி ஆள்வதே உண்மையான வெற்றி. எனவே அத்தகைய பேராற்றல் கொண்ட சத்குருவின்மீது பரணி பாடுதல் சாலப் பொருந்தும்" என்று கூறி மோகவதைப் பரணியை அரங்கேற்றியதை பகவானே சுட்டிக்காட்டி உள்ள இந்த வரலாற்று நிகழ்வின் மூலம், இடைவிடாது சலிக்கும் மனத்தை அடக்கி வெற்றி கொள்வதே உண்மையான வெற்றி என்பதை அறிகிறோம்.*

*இங்ஙனம் தத்துவராயர் வாழ்க்கை நிகழ்ச்சி போன்று பகவானின் முன்னிலையிலும் அவரது அருட் பேராற்றலால் அலைபாயும் மனம் அடங்கிய மெய்ம்மை பலராலும் விவரிக்கப்பட்டது. பால் ப்ரண்டன், எங்ஙனம் தாம் பலகாலும் சிரமப்பட்டு சேர்த்து வைத்திருந்த பல நூறு கேள்விகள் அனைத்தும் பகவானின் திருமுன்னிலையில் அவர் நயனம் பட்ட மாத்திரத்தில் அடங்கிப்போய் பேரமைதி தன்னைச் சூழ்ந்ததை விவரிக்கின்றார். இதேபோன்ற அநுபவம் பகவானது அருள் பேராற்றலின்முன் மனம் முற்றிலும் அடங்கியநிலை பல்லோர்க்கும் சிந்தித்து உள்ளது.*

*அதுமட்டுமல்ல. திருவள்ளுவர் குறிப்பிடும் மற்றொரு பேராற்றலும் பகவானிடம் முதன்மையாக இருந்தது.*

*“ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்” என்று வள்ளுவர் குறிப்பிடும் ஆற்றல் பகவானிடம் விளங்கியது. யார் வரினும் ஏனென்று கேளாது அவரது பசியினை உணவளித்து ஆற்றும் பேராற்றல் பகவானிடம் இருந்தது. சுத்தானந்த பாரதியார் ‘ரமண விஜயம்’ நூலில் கூறுவதுபோன்று, ரமணாஸ்ரமத்தில் இரு பெரும் அக்னிகள் இடைவிடாது பொலிந்தன. ஒன்று ரமணர் என்னும் ஞானாக்னி. மற்றொன்று சமையல்கூடத்தில் எந்நேரம் உணவளிக்க எரிந்து கொண்டிருந்த பாகசாலை அக்னி.*

*இங்ஙனம் “ப$^4$க:” என்னும் சொல்லிற்கு உரித்தானவராக பகவான் திகழ்வதைக் கண்டோம். பகவானைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அவரது இயல்புகளை நினைக்கிறோம். இந்த அகிலத்தை உண்டாக்கும் பஞ்சபூதங்களிலும் உயரியது பகவானின் மாண்பு.*

*வெளிவளி தீநீர் மண்பல வுயிரா*
*விரிவுறு பூதபௌ திகங்கள்*

*வெளியொளி யுன்னை யன்றியின் றென்னின்*
*வேறுயா னாருளன் விமலா*
*வெளியதா யுளத்து வேறற விளங்கின்*
*வேறென வெளிவரு வேனார்*
*வெளிவரா யருணா சலவவன் றலையில்*
*விரிமலர்ப் பதத்தினை வைத்தே.*

*(அருணாசல பதிகம், 7)*

ஆகாயம், காற்று, நீர், தீ, மண் எனப் பல்வேறு பௌதிக உருக்கள் ஆதார சக்தியினை உன்னிடம் இருந்தே வெளிப்பட்டன. இதையெல்லாம் வேறாக நின்று நோக்கும் 'நான் யார்?' என அதிர்ந்திடும் ஆத்மா நீதான் அன்றோ! உன்னை மறைக்கும் என் அகங்காரமான ஜீவபோதத்தின்மீது உன் மலர்ப்பதங்களை வைத்து அழுத்தி, ஞான விசாரத்தில் மனத்தைச் செலுத்த ஆத்மாவாக வெளிப்படுவாய் அன்றோ! என்கிறார் பகவான்.

*ஞாலமே! விசும்பே! நலம் தீமையே!*
*காலமே! கருத்தே! கருத்தால்தொழும்*
*சீலமே! திரு வீழிமிழலையுள்*
*கோலமே!அடியேனைக் குறிக்கொளே!*

*(திருமுறை 5, பதிகம் 13)*

என்பது அப்பர் வாக்கு.

"பூமியாக இருப்பவனே! வானமே! நன்மையும், தீமையுமாய் இருப்பவனே! காலமாகி நிற்பவனே! கருதும் உள்ளமாகி இருப்பவனே! உள்ளத்தில் எழும் கருதும் கருத்தால் தொழுகின்ற சீல உணர்வே! திருவீழிமிழலை இறைவனே! நீ அடியேனைக் குறிக்கோளாய் கொள்ளவேண்டும்" என்கிறார் அப்பர்.

*"கோபமில் குணத்தோய்! குறியாய் எனைக்கொள"*

*(அக்ஷரமணமாலை, 25)*

*"அருணை என்று எண்ணயான் அருட்கண்ணி பட்டேன்"*

*(அக்ஷரமணமாலை, 102)*

என்று இறைவனை தன்னைக் குறிக்கோளாய்க் கொண்டதை பகவான் பாடுகிறார்.

நலம், தீமை, குற்றம், குணம் எல்லாமும் அவனே என்ற உயரிய கருத்தையே மற்ற அடியார் வெளிப்படுத்துகிறார். இங்கே

"குற்றம் நீ! குணமும் நீ!
கூடல் ஆலவாயிலாய்"

என்று சம்பந்தரும் பாடுகிறார்.

பகவான் குற்றம், குறையெல்லாம் தாண்டிய 'அருள் நிறைவான அமுதக்கடல்'. சமயம், சாத்திரம் அனைத்தையும் கடந்த மஹாவ்யக்தி.

பொங்குபல சமயம் எனும் நதிகள் எல்லாம்
புகுந்து, கலந்திட நிறைவாய்ப் பொங்கி, ஓங்கி
கங்குகரை காணாத கடல்

என்ற இராமலிங்க சுவாமிகள் சித்தரிப்பதின் முழுவடிவம். அக்ஷரமணமாலை என்றும் பரபக்தி காவ்யம், உள்ளது நாற்பது போன்ற ஞானநூல்கள் ரமண கீதை போன்ற யோக சாத்திரங்கள் அனைத்துமே அவர் வாக்கில் வெளிவந்தன. அத்தனை சமயக் கருத்துக்களையுமே ஏற்றுக்கொள்ளாத சலம் போன்றோர் வரினும் அவர்களையும் ஏற்று அருள்புரிந்தவர் பகவான்.

விரிவிலா அறிவினோர்கள்
வேறொரு சமயம் செய்து
எரிவினாற் செய்தாரேனும்
எம்பிரானுக்கு ஏற்றதாகும்

என்ற திருநாவுக்கரசர் வாக்கின் இலக்கணம் பகவான் வாழ்வும் உபதேசமும்.

டாக்டர் சையத் போன்ற முகமதியர்கள் கோஹன் போன்ற யூதசமயம் சார்ந்தோர், பால்பிரண்டன் போன்ற கிறித்தவர்கள், ப்ரக்ஞானபாதர் போன்ற

பௌத்தத் துறவியர் அனைவருக்குமே வேற்றுமை இன்றி ஞானஅமுதினை வழங்கியவர். அதேசமயம், "அனாவசியமான வாதங்களில் ஈடுபடாமல், இந்தக் கேள்வியைக் கேட்பவர் யார்? எங்கிருந்து எழுகின்றது என்பதை உண்முக நோக்கினால் ஆழ்ந்து அறி" என்று வழிகாட்டினார் பகவான்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்ற ஞானசம்பந்தர் வாக்கினாலும் வழிகாட்டுவார் பகவான்.

"அனைத்தும் பகவானே!" என்பது ரமண பகவானை முற்றிலும் சரண் அடைந்தோர் உள்ளத்தில் இடையறாது ஒலிக்கும் நாதம். அனைத்தும் ரமண ஸ்வரூபமே!

"இருளே, ஒளியே, இரண்டும் அலாத
பொருளே, அடியேன் புகல் ஆம் பரமே
தெருளே, தெருளின் தெளிவே, தெளிந்த
அருளே, அதீதச் சிற்றம்பலமாம் செம்பதமே
ஒன்றே, இரண்டே, உவை கடந்த மோனமணி
மன்றே, மருந்தே, மணியே, வான்மந்திரமே
முன்பே முளைத்த முழு முதலாம் இன்பப்
பேரன்பே, சிவமாய் அமர்ந்த அனந்தமே"

*(ரமணபுராணம், 467-474)*

தேற்றமனத்தைத் திருப்பித் திருவடி
விமல மெய்ஞ்ஞான விசும்பாம் இதயக்
கமல வளர்தேன் நுகர் களி அளியாகப்
புரிந்தருள் செயல் உன்பாரம் போற்றி!
அற்பன் என்செயல் என் அறிவு ஆனந்த
தற்பர ரமண தயாபர போற்றி!

*(பிரார்த்தனைத் திருஅகவல் 113-119)*

வெளியே அலையும் மனத்தை உண்முகப்படுத்தி தூய மெய்ஞ்ஞான ஆகாயமாம் இதயக் கமலத்தில் உள்ள



பேரானந்தத் தேனை உண்டு மகிழும் தேன்-வண்டாக என்னை மாற்றுவாய்! அகந்தை என்னும் அழிவில் இருந்து நான் விடுபட்டு, ஞானத்தில் மீண்டும் உயிர்க்கும்படி எனக்கு அருள் செய்தல் முற்றிலும் உன் பொறுப்பே ஆகும். இதில் அற்பனான எனது முயற்சி ஒன்றுமே இல்லையே. "தான்-தான்" என்று இதயத்தில் அதிரும் தத்பர ஸ்வரூபமான ரமண தயாபரனே! என்னையும் ஆன்ம ஸ்வரூபம் ஆக்குவது உன் கடன்" என்று முருகனார் பாடுவது போலும் நாம் பாடிப் பணிபோம்.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## 7. விழைவின் முழுமை

பற்பல ஆண்டுகட்கு முன்னர், முதல் உலகப் போர் துவங்கிய மூன்றாம் ஆண்டிலே எங்கும் பேரழிவின் கோர தாண்டவம் நிகழ்ந்து கொண்டு இருந்தது. அச்சமயம் ஐரோப்பாவின் ஒரு சிறிய இரயில் நிலையத்தில், இராணுவ உடை தரித்த ஓர் இளைஞன் தனது வண்டிக்காகக் காத்திருந்தான். வருகின்ற வண்டியில் பயணித்த அந்த இளைஞன் போர் பயங்கரமாக நிகழ்ந்து கொண்டு இருக்கும் முன்னணிக்குச் செல்ல வேண்டும். அங்குச் சென்றவர் பலர் உயிருடன் திரும்பியதே இல்லை. இந்தப் போரின் காரணமாகத் தனது குடும்பத்தில் இருந்தும், படிப்பில் இருந்தும் பலவந்தமாகப் பிரிக்கப்பட்ட அந்த இளைஞன் தனது விதி எதிர்காலத்தில் எதனைத் தரப் போகின்றது என்ற நிலையில் ஆழ்ந்து இருந்தான்.

அது இலையுதிர் காலம். ஆழ்ந்த இரவின் அடர்ந்த வானில், எரி நட்சத்திரங்கள் சுடர் விட்டுக் கொண்டு பூமியின் மீது விழும் தருணம் பெரும்பாலோர் வழக்கமாக நம்புகின்ற ஒன்று அவன் மனத்தில் எழுந்தது. ஒரு எரி நட்சத்திரம் விழும் அதே நொடியில் நாம் எதை எண்ணி வேண்டுகின்றோமோ அது நிச்சயம் சித்திக்கும்.

அவ்விளைஞன் ஒரு பெரிய எதிர்பார்ப்புடன் வானை நோக்கி இருந்தான். திடீரென ஒரு சிவந்த ஒளிக்கீற்று விண்மீன்கள் இடைய தோன்றியது. அது பூமி நோக்கி வந்துகொண்டு இருக்கும் ஒரு தறுவாயில் அன்பு என்ற விருப்பினை மனதில் உச்சரித்தான்.

*பல ஆண்டுகள் கடந்தன. அன்று வீழ்ந்த விண்மீனின் ஞாபகமும், அவன் மனதிலிருந்து மறைந்தது. தினசரி வாழ்வின் பரபரப்பில் அவன் இதயத்திலிருந்து எழுந்த பேரன்பை நாடும் பெரு விருப்பமும் மறைந்தது. இப்பொழுது இளமையில் இருந்து வளர்ந்து விட்ட அந்த இளைஞனுக்கு சராசரி வாழ்வின் பல்வேறு அனுபவங்கள் ஏற்பட்டன. அவனுக்கு நண்பர்கள் கூட்டம் பெருகியது. பலமுறை அவன் காதலில் விழுந்து எழுந்தான். தன்னைவிடச் சிறந்தவர் என்று அவன் எண்ணியவர்களிடம் பணிந்து வந்தான். எனினும் இந்த ஒவ்வொரு அனுபவமும் அவனுக்கு ஏமாற்றத்தையே அளித்தன. ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலும், தான் மிகவும் அடைய ஏங்கிய பேரன்பு, அவனுக்கு முழுமையாய்த் தரும் அன்பு கிடைக்கவில்லை. அவன் தான் அன்பினைக் கண்டோம் என்று கருதிய ஒவ்வொரு அனுபவத்தின் இறுதியிலும் ஓர் அபஸ்வரம், ஒரு மறைந்திருக்கும் ஐயம், ஒரு குறை இருப்பதைக் கண்டான். எனவே அவனால் எத்தகைய தயக்கமும் இன்றி பூர்ணமான அன்பை எவருக்குமே அளிக்க இயலவில்லை. இந்தக் குறைபாட்டின் இடையிலே, ஓர் ஆழ்ந்த பூர்ணமான பேரன்பு எப்படி இருக்கும் என்பதை அவனால் கற்பனை செய்யவும் இயலவில்லை.*

*அவனது ஒவ்வொரு அனுபவத்தின்போதும் ஒரு மௌனமான சக்திவாய்ந்த குரல் அவனது இதயத்தில் அன்பு என்பது இதுவல்ல, இதுவல்ல என்று இடையறாது ஒலித்துக்கொண்டு இருந்தது. அதேசமயம், ஆழ்ந்த அமைதி தவழும் தருணங்களில், இந்தப் புயல்வீசும் துன்பக் கடலையும், கருமேகம் சூழ்ந்த தினசரி வாழ்வையும் தாண்டி, பேரானந்தம் என்னும் ஞாயிறு, என்றும் அஸ்தமிக்காத ஒரு நாடு உள்ளது. அங்கே, பூர்ண மனநிலைவு என்ற தீவின் கரையில் அசைவற்ற நிரந்தர அலைகள் எழுந்து கொண்டே உள்ளன என்பதை அவனது உள்ளுணர்வு கூறியது.*

## *8. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?*

*நேசமில் எனக்குன் ஆசையைக் காட்டி நீ*
*மோசம் செய்யாதருள் அருணாசலா*

*(அக்ஷரமணமாலை, 60)*

*முப்பது ஆண்டுகள் கடந்தன. தொலைதூரத்தில் உள்ள இந்திய நாட்டில் ஒரு யாத்ரீகன் ஒரு ஆச்ரமத்தின் மூலையில் கூரையின் கீழ், திருவண்ணாமலை எனும் ஊரில் அமர்ந்து இருந்தான். பல்லாண்டுகட்கு முன் நாம் கண்ட, ஒரு காரிருளில் அமர்ந்து கொண்டு, விண்கற்கள் தனது எதிர்காலத்தினைப் பற்றி உரைக்கின்றனவா எனக் காத்திருந்த இளைஞன்தான் அவன். இந்த முப்பதாண்டுகளில், வாழ்வியல் முற்றிலும் மாறுபட்டதானது. பல நாடுகளின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டன. இந்தக் கால இடைவெளியில் நிகழ்நத இரண்டு உலகப் போர்களில் சில நாடுகள் தமது தனித்துவத்தை இழந்தன. பல புதிய தேசங்கள் உருவாகின. இருப்பினும், இந்த உலகப் போர்கள் ஏற்படுத்திய பேரழிவினைக் கண்ட பிறகும், உலகம் மாறிவிடவில்லை. தனது பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி ஏதும் எடுக்கவில்லை. ஏன் இந்தப் பேரழிவு ஏற்படுத்தப்பட்டது என்ற மூலகாரணத்தையும் உலகம் அறிந்து கொள்ளவில்லை. மீண்டும் இத்தகைய பேரழிவு ஏற்படும் சாத்தியக் கூறு இவ்வுலக மாந்தரின் உள்ளங்களில் பேரச்சமாகக் குடியிருந்தது. உலகாயத்தில் மூழ்கிய இந்த நாடுகள் இந்து சமய புராணத்தில் கூறப்பட்டுள்ள கலியுகத்தில் சந்திக்கின்றனவா?*

*ஆயினும் பேரமைதி தவழும் ஸ்ரீ ரமண மகரிஷியின் ஆச்ரமத்தில் இந் நிகழ்வுகள் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இங்கே ஒரு முற்றிலும் வேறுபட்ட சாந்தமான சூழ்நிலை நிலவியது. வெளி உலகின் அகோரமான இம்சை வழிகளுக்கு இங்கே புகும் வாயில் எதுவுமே இல்லை.*

நாம் முன்பு கண்ட அந்த இளைஞன் இந்த உலகின் பிரச்சனைகள் அனைத்தையும் கடந்த ஒரு மகா வியக்தியின் காலடியில் அதன், திருமுகத்தை நோக்கியவாறு அமர்ந்து இருந்தான். தனது கடந்த கால வாழ்வின் நிகழ்வுகளைத் திரும்பவும் நோக்கி அனுபவங்களை எடை போட்டுக்கொண்டு இருந்தான். அவனுக்கெதிரே புதிய காட்சிகள் விரிந்தன. அவனுடைய பழைய தொடர்புகள் 'அன்புகள்' அனைத்தும் அவன் கண்முன் விரைவாகத் தோன்றி மறைந்தன. அவற்றால் பகவானின் மௌனமான அக்கினிப் பார்வையினை எதிர்கொள்ள முடியவில்லை. இந்த ஆச்ரமச் சூழலில் உள்ளவர் நோக்கங்கள் அவன் இதுகாறும் கொண்டுள்ள நோக்கங்களுக்கு முற்றிலும் வேறுபட்டவை அல்லவா? தனக்கும் இவற்றிற்கும் ஓர் ஒத்திசைவைக் கண்டுபிடிக்க முயல்வது முற்றிலும் அபத்தமான ஒன்றல்லவா? தனது சுயநலத்திற்காகவே இதுகாறும் செயல்பட்டு வந்து, மற்றவரைத் தன் சுயநோக்கத்திற்காகப் பயன்படுத்தி வந்தது இழி செயல் அல்லவா? இதனை ஆழ்ந்து எண்ணும்போது தனது மனச் சாட்சியின் நீதிமன்றத்தில் தனது சுயநலம் தோலுரிக்கப்பட்டு நிற்பதைக் கண்டான் அவன்.

பகவானின் முன்னிலையில், இதுகாறும் இருந்த பொய்ம்மை நீங்கி, ஒரு தூய்மையான சுயநலம் சிறிதும் அற்ற ஆன்மிக எழில் ஜொலிக்கும், இருமை ஏதும் அற்று ஒருமையால் ஒளிவீசும் உயரிய நோக்கம் உள்ளத்தே குடி கொள்வதைக் கண்டான். இனி அவன் வாழ்வில் ஏமாற்றமோ, குழப்பமோ, ஒவ்வாமையோ எதுவுமே இல்லை. அது ஒரு பரிசுத்த ஆன்மிக வாழ்வாகப் பரிணமித்தது.

இப்போதுதான் அந்த ஆன்மிக யாத்ரீகன் முப்பது ஆண்டுகட்கு முன் தான் விண்மீன் விழும்போது மனதில் எழுந்த விருப்பத்தின் பூர்த்தியை உணர்ந்தான்.

இந்த விருப்பத்தின் பூர்ணத்துவமே தனது வாழ்வின் பரிணாமம் என்பதை அவன் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டான். தனக்கு முன் தோன்றியுள்ள இப்புதிய பாதை தன்னை எல்லையற்ற முழுமையில் கொண்டு சேர்க்கும் என்பதை அவன் கண்டான். அவனை விட்டு அச்சம் முற்றிலுமாக நீங்கியது. ஓர் எல்லைக்குள் அடங்கும் அனைத்துமே அழிவில்தான் முடியும். எல்லையற்ற பூர்ணமே உண்மையான வாழ்க்கை.

* * *

தன்னுடைய அடியார்களிடம் தன்மீது பேரன்பை எழச் செய்யும் ஓர் அற்புத சக்தி பகவானிடம் உள்ளது. இந்தச் சக்தி, அவர்மீது கொள்ளும் பக்தியை ஏற்படுத்தி அவர்தம் வாழ்நிலையை உயர்த்தி, இந்த அகிலத்தையே உருவாக்கும் அளப்பரிய ஓர் உன்னத சக்தியுடன் தொடர்பு கொள்ளச் செய்கிறது. பகவானிடம் அடியார் கொள்ளும் இந்தப் பேரன்பும், பக்தியும் சாதாரணமாக உலகியலில் காணப்படும் பொறாமை, தனதாக்கிக் கொள்ளல், வெளித் தோற்றத்தின் கவர்ச்சி, நிரந்தரமற்ற தன்மை, மயக்கம் ஆகிய தீய பண்புகள் ஏதும் இல்லாத தூய்மையான ஒன்று. அன்பு செலுத்துவோர்க்கும் அன்பின் லட்சிய பொருளுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லாத அத்வைத பக்தி இது. சத்குருவிடம் செலுத்தப்படும் இப்பேரன்பு-அன்பு எத்தகைய எதிர்பார்ப்புகளும் இல்லாதது. ‘என்னையே உனக்கு முற்றிலும் தர அருள்புரிவாய்’ என்ற தூய்மையான அன்புடன், எங்கும் நிறைந்துள்ள அந்தப் பரம்பொருளுடன் பேதமின்றி ஒன்றுபட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளையே கொண்டது இது.

பகவானின் மஹிமையைத் தெளிவாக உணர்ந்த அன்பன் தனது தனித்துவத்தை உதறித் தள்ளி, தனது இருப்புணர்வு தனது நாம ரூபபேதத்தைச் சார்ந்ததல்ல என்பதை உணர வேண்டும். பேரன்பிற்கு இயக்க

வியக்தியுடன் ஒன்றுபட வேண்டுமெனில், தனது அகங்காரத்தால் ஏற்பட்ட மானசிக மற்றும் உணர்ச்சி தொடர்பான தளைகளைக் களைய வேண்டும். பகவானின் வார்த்தைகள், சொற்களின் சாதாரணப் பொருளைத் தாண்டிய ஆழ்பொருள் கொண்டவை என்பதை அறிய வேண்டும். சத்குருவின் மெய்யான ஆன்மிக எழிலைக் காண வேண்டுமெனில், சத்குருவின் ஆன்மிக சாம்ராஜ்யத்திற்குள் அடி எடுத்து வைக்க வேண்டும். நாம் காணும் அவரது பௌதிக வடிவம் அவரது பேருண்மையின் வெறும் நிழல் வடிவமே என்பதை அறிய வேண்டும். பகவானின் சாந்நித்தியத்தில் வருபவர்கள் இந்த நிழல்கூடு எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை அறிவார்கள்.

ஆச்ரமத்தில் ஒரு துன்பியல் நிகழ்ச்சி நேர்ந்தது. பகவானின் உடல்நிலை திடீரென சீர்குலைய ஆரம்பித்தது. அவரைக் காணும்போதே அவரது முகத்தில் சோர்வும், உடலில் தளர்வும் வெளிப்படையாகத் தெரியலாயின. வழக்கமாக நடைபெறும் வேத பாராயணத்தின்போது, அவரது சிரம் கட்டுப்பாடின்றித் தொய்வடைய ஆரம்பித்தது. பகவான் சிரமப்பட்டுத் தன் தலையை உயர்த்த முயன்றாலும் இத் தொய்வு நீடித்தது. மாலை ஆறு மணி அளவில் ஆலயக் கூடம் பெரிதும் காலியான சமயத்தில் அவரது அணுக்கத் தொண்டர்களும், பக்தர்களும் மட்டுமே சூழ்ந்து இருந்தனர். நாங்கள் அப்போது அவரது கரத்தைச் சுற்றிய பாண்டேஜ் துணியிலும் அவர் சாய்ந்திருந்த தலையணிகளிலும் பெரும் ரத்தக் கறைகளைக் கண்டோம். அணுக்கத் தொண்டர்கள் மிகவும் பயந்துபோய் தினமும் ஆச்ரம மருந்தகத்தில் இருந்து வந்து பகவானுக்கு பாண்டேஜ் மாற்றி, சிகிச்சை அளிக்கும் வைத்தியரை அழைத்து வந்தனர்.

எங்கும் ஆழ்ந்த மௌனம் நிலவியது. அப்போது சில பெண்மணிகள் அழத் தொடங்கினர். அங்கிருந்த

ஆண்களின் முகங்களில் ஆழ்ந்த கவலை ரேகைகள் படர்ந்தன. பகவானோ ரத்தப் போக்கைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. தனது புற்றினால் தாக்கப்பட்டு குருதி வழியும் கரத்தினையே ஏதோ தமக்குத் தொடர்பே இல்லாத ஒரு பொருள்போல் பார்த்துக் கொண்டு இருந்தார் அவர். தனது வழக்கமான மிருதுவான கையசைப்புடன், 'நான் உங்களுக்கு எல்லாம் கஷ்டம் கொடுத்து விட்டேனே!' என்பதுபோன்று, அந்தக் குருதிக் கறை படிந்த தலையணைகளைச் சுட்டிக் காண்பித்தார் பகவான். அவர் முகத்தில் ஒரு மந்தஹாசம் தோன்றியது. அவ்வளவே! மரணத்தின் கொடும் சாயல் வீழ்வதாகச் சுற்றி உள்ளோர் அஞ்சியபோதிலும், அது பகவானிடம் ஒரு தாக்கத்தையுமே ஏற்படுத்தவில்லை.

இந்தக் கடுமையான சூழ்நிலையில், அவர் காலடிக்கீழ் அமர்ந்திருந்த நாங்கள் அனைவருமே, ஒருவார்த்தை கூடப் பரிமாறிக் கொள்ளா விடினும், ஒன்றேயான உள்ளுணர்வால் திளைக்கப்பட்டு, ஒருவர் மனதில் இருப்பதை மற்றையோர் தெளிவாக உணர்ந்து கொண்டோம். நாங்கள் எதிர்நோக்கும் பேரிடரைத் தவிர்ப்பதற்காக, நாங்கள் ஒவ்வொருவருமே தத்தம் உடலில் ஓடும் குருதி முழுவதையுமே சத்குரு இழந்த ரத்தத்திற்கு மாற்றாகத் தர ஆயத்தமாய் இருந்தோம்.

அப்போது அவசர அவசரமாக வைத்தியர் வந்து சேர்ந்தார். குள்ளமான உருவில் இருந்த அவர் மலாயா வாசியைப் போன்ற தோற்றம் கொண்டவர். பகவானுக்கு மீண்டும் பாண்டேஜ் போட்ட அந்த வைத்தியர் பகவானின் இந்த நிலையில் அவர் நீண்டநேரம் ஹாலில் அமர்ந்திருக்கக்கூடாது; அறைக்குச் செல்ல வேண்டும்; இல்லையெனில் அவர் தேகம் மேலும் மோசமடையும் என வற்புறுத்தினார். ஆயினும் பகவான் ஒரு மென்மையான தலையசைப்பினால் அதனை மறுத்து விட்டார். தம்மைச் சுற்றியுள்ள அனைவர்மீதும்

*தமது திருக் கண்ணோக்கத்தினைச் செலுத்தினார் பகவான். பிரகாசமான ஒரு முறுவல் அவர் வதனத்துக்கு மேலும் ஒளியூட்டியது. எமது இதயங்களைக் கவ்வியிருந்த துயரத்தை உணர்ந்த பகவான், அதற்குக் கைமாறாக தனது அருட் பார்வையை அளித்தார் என்றே தோன்றியது.*

*அத்தகைய பிரகாசமான மஹரிஷியின் புன்முறுவலை வேறு எந்த ஒருவர் முகத்திலும் நான் இதுவரை கண்டதில்லை; இனிக் காணப்போவதுமில்லை. மாசுமறுவற்ற பேரெழில், அனைத்தின்மீதும் கொண்டிருந்த பேரன்பு, நம் போன்றோரின் குறைபாடுகளை உணர்ந்து காட்டும் பரிவு, அனைத்தையுமே அவரது முறுவல் உள்ளடக்கிய ஒன்றாகும். அதனின் சிறப்பைச் சொற்களால் விவரிக்க இயலாது. அனைத்தையும் கடந்த அம்முறுவலின் பேரெழிலையும் ஆழத்தையும் அதைக் கண்டோர் மட்டுமே உணர முடியும்.*

*நான் எண்ணினேன், இத்தகைய பேரன்புக் கடல், அனைத்து வழிபாடுகளையும் தன்னை நோக்கிக் கவரும் பெரும் சக்தி, இந்தச் சக்தியால் இந்தக் கொடிய விதியை மாற்ற முடியாதா? ஏன் பகவான் இதனைச் செய்யக் கூடாது? அதேசமயம், இது கொடிய நிகழ்வு என்பது பகவானின் கருத்தில் இல்லையே? அனைத்தையும் கடந்தவர் அல்லவா அவர்! என்பதே என் எண்ணம் ஆனது.*

*இந்த எண்ணம் எழுந்த அதே தருணத்தில் நான் எனது தலையை உயர்த்தி பகவானைக் கண்டேன். பகவானின் அருட் கண்களில் இதன் விளக்கத்தைக் கண்டேன். என் இதயத்தில் மீண்டும் மௌனம் நிரம்பியது. இறைவா! அனைத்தும் உன் செயல் அல்லவா!*

* * *

இன்று பகவானைத் தாக்கிய 'சார்கோமா' புற்று பற்றிய விவரத்தைப் படிக்க நேர்ந்தது. பகவானின் உளப் பாங்கினையும் இது விளக்குகிறது. அதன் சுருக்கம் இதோ:

ஒரு சாமான்ய மனிதன் ஏனையோர்க்காகத் துன்பப்படும்போது அதைத் 'தயை உணர்வு' என்று கூறுகிறோம். பரமஹம்ச யோகி, இதைப்பற்றி விளக்கும்போது, இதனைத் 'தத்துவத்தில் விளைந்த நோய்' என்று கூறுகிறார். அவர் உடல் நீத்ததற்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாக இத்தகைய விசித்திர வியாதி அவரைப் பற்றியது. அவரது சீடர்கள் இதனைப் 'பரமஹம்ஸர் தமது சீடர்கள் சிலரின் உடல் மற்றும் ஆன்மிகத் தொடர்பான தொல்லைகளையும், சுமைகளையும் அவர்கள் சார்பாகத் தாமே ஏற்றுக் கொண்டதன் விளைவு' எனக் கூறுகின்றனர். தனது சுய சரிதையில் பரமஹம்ஸ யோகாநந்தர் இது குறித்து விளக்குகிறார். உயர்ந்த யோக சித்தி பெற்றவர்கள். தத்துவார்த்தமான வழியில் பிறருடைய உடல் நோய்களைத் தாமாக மாற்றிக் கொள்ளும் வழிமுறையை அறிவார்கள். ஒரு சக்தி வாய்ந்த மனிதன் ஒரு உடல் பலம் குறைந்தவனது சுமையைத் தாமே சுமந்து உதவுவது போன்றதாகும் இது. ஆன்மிகத்தில் மிக உயர்நிலை அடைந்த ஒரு மஹானால், தனது சீடர்களின் முந்தைய கர்மாக்களின் தாக்கத்தின் ஒரு பகுதியைத் தாமே வலிந்து ஏற்பதன்மூலம் அவர்களது பாரத்தைக் குறைக்கிறார். ஒரு செல்வந்தன் தனது ஊதாரி மகனின் கடன்களின் பெரும்பகுதியினை தானே தானே செலுத்தி, எந்த மகனின் செயல்களின் தீய விளைவுகளில் இருந்து அவனைக் காக்கிறான். அதுபோன்றே ஒரு ஞானியும் தனது உடல் நலத்தின் ஒரு பகுதியை மகிழ்ச்சியுடன் தியாகம் செய்து தனது சீடர்களை பெரும் துன்பத்தினின்றும் காத்து அவர்கள் கர்மச் சுமைகளைக் குறைக்கிறார்.

# திருக்குறளும் ரமணரும்

சு. பரமேஸ்வரன்

தெய்வப்புலவர் வள்ளுவர் குறளை எழுதியபோது தான் எந்த ஒரு சம்பிரதாயத்தையோ சமயத்தையோ, சார்ந்தவன் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், உலகில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதையே, வாழ்வின் குறிக்கோளாக வைத்தார். பொதுமறை எனப் புகழப்படும் நூல் திருக்குறள். இதில் மனிதரால் அடையப்பட வேண்டிய அறம், பொருள், இன்பம் பற்றி நன்கு விளக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்களுக்கு ஏற்றமுறையில், வீடுபேற்றினையும் துறவறத்தையும் சுருக்கமாகவும், வெகு நுட்பமாகவும் கூறப்பட்டுள்ளது. முதல் அதிகாரம் இறைநிலை, இரண்டாவது உயிர்களின் ஆதாரமாயுள்ள மழையின் சிறப்பு, மூன்றவதாக மனித குலத்திற்கு வழிகாட்ட ஒரு லட்சிய மனிதரைப் பற்றிப் பேசுகிறது. மழை என்பது வான் அமுது உயிர்களை வளம் பெறச்செய்யும். நீத்தார் என்போர் எல்லாப் பற்றுகளையும் விட்ட ஞானிகள், அவர்கள் சமுதாயத்தில் உணர்வை, அன்பை உரம் பெறச் செய்து மனித குலத்தை வாழ்வாங்கு வாழ வழிகாட்டி அருளுவார்கள். வான் அமுதம் போல் ஞானிகள் வையகம் உய்ய வழி காட்டுவதால் நீத்தார் பெருமையைப் புகழ்ந்து 10 குறள்களை அருளினர்.

மானுடக்கோலங் கொண்ட பேரறிவாளர்களான புத்தர், சங்கரர், ரமணர், ராமகிருஷ்ணர், தாயுமானவர், வள்ளலார் போன்றவர்களை நினைவு கூற இங்கே நீத்தார்பெருமை காட்சிப்பொருளானது. பற்றுகளை எல்லாம் விட்டு விடுதலையானவருக்கு சமுதாயத்தைக் கட்டிக்காக்கும் வெட்டிவேலை எதற்கு? சமூகத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளை, விழுமியங்களைத்

துறந்தவரிடம் எதிர்பார்ப்பது சரியில்லை என்றால் நாம் துறவைப் பிழையாகப் புரிந்து கொண்டதாகும்.

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். (346)

வானவர்களாலும் அடைய முடியாத, வீடுபேற்றினை அடைவதால் மனிதர், நரர், தேவர்களுக்கும் மேலானவர் எனச்சிறப்பித்துக் கூறுகிறார்.

ரமணர் தான் பெற்ற இறை அனுபத்தை, பெருங்கருணையினால், தீஞ்சுவைப் பாடல்களாக அருளியுள்ளார். அன்பர்களின் கேள்விகளுக்கு திருவாசகம், கைவல்ய நவநீதம், ரிபு கீதை, தாயுமானவர் பாடல்களையே பெரும்பாலும் மேற்கோள் காட்டி விளக்குவார். நாயன்மார்கள், ஆழ்வார்கள் வரலாறுகளையும் பக்திரஸத்துடன், உணர்வு பொங்க ரமணர் எடுத்துரைப்பார். ஆனால் ரமணர் திருவள்ளுவரைப் பற்றியும், குறளைப் பற்றியும் பேசியதாகத் தெரியவில்லை, அதுபற்றிய குறிப்புகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இது ஒரு வியப்பான செய்தியாகும். குறளில் கூறப்பட்ட விழுமியங்கள், நீர்மைகள் யாவும் ரமணரின் 54 ஆண்டுகள் வாழ்வியல் நெறியாக உள்ளதை யாவரும் அறிந்ததே. ரமணர் அருளிய 'உள்ளது நாற்பது' எனும் நூல் உபநிடத்திற்கு ஒப்பானது. நாற்பது பாடல்களின் கருப்பொருள் முதலாவதாக உள்ள மங்கலப் பாடலில் அடக்கம். சதா நிஷ்டரான ரமணரின் அந்த நான் உதியாத உள்ள நிலை மங்கலச் செய்யுளாக வெளிப்பட்டது.

உள்ளதுஅலது உள்ள உணர்வு உள்ளதோ உள்ளபொருள்
உள்ளல்அற உள்ளத்தே உள்ளதால் — உள்ளமெனும்
உள்ளபொருள் உள்ளல் எவன்? உள்ளத்தே உள்ளபடி
உள்ளதே உள்ளல் உணர்வாயே

மங்கலப் பாடலின் கருத்து: உள்ளத்தில் உள்ள ஞான சொரூப வஸ்துவே எக்காலத்தும் உள்ள பொருள். அது

மனதின் கண்ணுள்ள சகல நினைவுகளும் நீங்கியபோது பிரகாசிப்பதால், நினைப்பு, மறப்பற்று அம்மயமாய் இருத்தலே தியானமாம்.

இப்பாடலின் கருப்பொருளை வள்ளுவர் எப்படிக் கையாள்கிறார் என்று பார்ப்போம். குறளில் தியானம், தாரணை, சமாதி எனும் சொற்கள் இல்லை. சத்திய தரிசனத்தை, மாசறுகாட்சி என்பார். அபரோட்ச ஞானத்தை மெய் உணர்தல் என்பர். என்றும் நித்தியமாய் நிலைத்து நிற்கும் உண்மைப் பொருள் எதுவோ அதுவே மெய் எனும் சொல்லுக்குப் பொருள்.

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (357)

இக்குறளில் உள்ளம், உள்ளது, ஓர்தலும், உணர்தலும், பிறவியும் நுட்பமாய் அறிய வந்துள்ளது. உள்ளது என்பது மெய்ப்பொருள். அது என்றும் நிலையாய்த் தொடர்ந்து இருப்பதால் உள்ளது என்றார். வடமொழியில் சத்து என்பதும் இதுவே. உயிருக்கு உயிராய் இருந்து இறைவன் இயக்குகிறான், அது மனம், வாக்கிற்கு எட்டாதது. அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டதை உள்ளது என்று கூற ஆழ்ந்த நம்பிக்கை, உறுதிப்பாடும் வேண்டும். ஞானிகளின் வாக்கே வேதம். மன அறிவின் வெளிப்பாடு நாளும் பெருகி வருவது கண்கூடு. அவை ஒருபோதும் மன அமைதியோ இன்பத்தையோ தர இயலாது. பேரறிவின் பயன் யாது எனில்? பிறவிப்பிணியைப் போக்க ஓர்ந்து உரியதைச் செய்வதாகும்.

ஓர்த்து என்பது ஒருமுகமாய் ஒன்றியிருந்து உள்ளதை உணர்வதே மெய்யறிவு எனப்பட்டது. அறத்துப்பால் அதிகாரத்தில் உள்ள 380 குறள்களில் இந்த ஒரு குறள் மட்டுமே 'ஓ' என்ற எழுத்தில் துவங்குவது வியப்பன்றோ?! ரமணரும் அருணசல பதிகத்தில்,

*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி...*
*ஓர்ந்து உய்மின் உயிர்காள்....*

என்பார்.

வள்ளுவரின் குறளிலும், ரமணரின் பாடலில் உள்ள சொல் மாட்சி, பொருள் ஒற்றுமையைக் கண்டு பெருமிதம் கொள்வோம். துன்பத்தை நீக்கி பேரின்பத்தை அருளவல்லது நம் உள்ளத்திலேயே உள்ளது. அதை ஓர்த்து உணர்வதே அறிவுடைமை. மனிதன் தேவையற்ற மருள்களை எல்லாம் ஆவலோடு அறிய விழைகின்றான். ஆனால் உள்ளதை உணராமல் ஒழிந்து போகிறான். மனம் ஓயாதவரை தீராது துன்பம். உள்ளதனை உணர்தல் என்பது மனம் இறத்தலைக் குறிக்கிறது. இது ஒரு நிலை மாற்றமேதான், மனமற்ற பரிசுத்த நிலை, இந்நிலை கைவர காவி உடுத்தவும் வேண்டாம், காடு, மலை தேடி அலையவும் வேண்டாம். இருந்தபடி இருந்து பவத் தொடக்கை வெல்ல இயலும். உள்ளத்தில் உள்ளதை உணர்ந்த, தன்னை அறிந்த ஞானிகளை எவ்விதத்திலும் ஐயம் உறாது தெய்வமாகவே எண்ணி போற்றப்பட வேண்டும் எனக் கூறும் குறள் இதோ :

*ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்*
*தெய்வத்தொடு ஒப்பக் கொளல். (702)*

ஞானிகள் அருளியவை எல்லாம் அனுபூதிச் செல்வங்களாகும். அதைக் கண்டவர் விண்டிலர் என்பது அதை இன்னதெனக் சுட்டிக்காட்ட இயலாது என்பதாம். ஆயினும் அருள் தாகமுடைய சாதகர்கள் குருவருள் துணைகொண்டு தீவிர சாதனையால் உணர முடியும். திருக்குறளில் உள்ள மெய்உணர்தல் அதிகாரத்தில் உள்ள முதல் குறள் தத்துவ விளக்கமாக மனிதனின் மருள் நிலையை நுட்பமாய் விளக்குகிறது. பத்தாவது குறள் செயல்முறை விளக்கமாய் அமைந்துள்ளது எனலாம். முதல் குறள் இதோ:

*பொருள் அல்லவற்றைப் பொருள்என்று உணரும்*
*மருளானாம் மாணாப் பிறப்பு. (351)*

உண்மைப் பொருள் அல்லாதவைகளைப் பொருள் என்று அறிகின்ற மயக்க அறிவினால் துன்பமே விளையும் எனக்குறள் கூறுகின்றது. பொருள் எனும் சொல்லுக்கு உரிமையுடையவர் இறைவன் ஒருவனே. அது நிர்க்குண பிரம்மம். வேதாந்தம் கூறும் நித்திய அநித்திய வஸ்து என்பதும் இதுவே. பரம்பொருள் பெரிய பொருளாக இருப்பதால் மற்றவையாவும் கீழான பொருள்களே. மனதில் ஏற்படும் உணர்ச்சிகள் யாவும் பல்வேறு மனநிலை மாற்றத்தினால் ஏற்படுவதல்லாது அவை உண்மைப் பொருள்கள் அல்ல. ஆனால் அவைகளுக்கு நாம், காமம், வெகுளி, மயக்கம், புகழ் எனப் பல பெயரிட்டு அவற்றை உண்மைப் பொருளாக்குகிறோம். தெருளுக்கு மாறுபட்டது மருள். மருள் மயக்கத்தால் கிளிஞ்சியில் வெள்ளி, கானல் நீர் போன்றவற்றை பொய்ப் பொருளை மற்றொரு உண்மைப் பொருளாகக் காண்கிறோம். ஜடப்பொருள்களின் குறையை அறியாமையே இருள். மனப்பொருள்களின் அறியாமை மருள். அறிவில் தெளிவு என்பது தெருள். தன்முனைப்பு எனும் தற்போதம் நீங்கிய நடுவு நிலை என்பது அருள். அதுவே பொருள். இறை நிலை எனப்படுவது தூலஉடலில் உயிர், மனம், இறைநிலை யாவும் அணுக் கூறாக உள்ளதால் உள்ளத்தில் உள்ள பொருள் எனப்பட்டது. ரமண பகவான் அருளிய அருணாசல நவமணிமாலையில்,

*பொருள் நாடு சுற்றமொடு வருணாதி பற்றிஉளம்*
*மருள் நாடல் அற்றுநிதமும்*
*தெருள் நாடு உளத்தினில் நல்அருள் நாடி நிற்குமவர்*
*இருள் நாசமுற்று புவிமேல் ........*

என நயம்பட எடுத்துரைத்ததை உய்த்து உணர்வோம். நிலையற்றதை மெய் என்று உணர்வதே பிறவிப் பிணியைத் தருகிறது. தெருளுடையராய் மெய்ப்பொருளை உணர்ந்து உயர்ந்து கொள்ளல் வேண்டும்.

மெய்உணர்தல் அதிகாரத்தில் இறுதியாக உள்ளகுறள் செயல்முறை விளக்கமாய் அமைந்துள்ளது.

காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றின்
நாமம் கெடக்கெடும் நோய் (360)

எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் காமம், வெகுளி, மயக்கம் எனும் இம்மூன்றே. மூன்றின் நாமம் கெட பிறவித்துன்பம் எனும் நோய் நீங்கும். துயர் நீங்கி உயர்வதே தூய மெய்யறிவாம். மனவிகாரத்தில் ஏற்படும் இம்மூன்றும் பொய்ப்பொருள் என உணர்தல் வேண்டும். அவற்றின் நாமம் கெடவேண்டுமாயின் மனவிகாரம் அற்று, சலனமற்ற சாந்த மோனநிலைக்குச் செல்லுதல் வேண்டும். உள்ளல் என்பது எண்ணுவது, நினைப்பது மனம், அது பொய்ப்பொருள், மெய்ப்பொருளை உணரமுடியாமல் ஒரு திரைபோல் மனம் செயல்படும். மனதில் உருவாக்கப்பட்ட பொருள்களின் நாமம் கெட முயற்சிப்பதா? அவற்றை உருவாக்கியவரை அழிப்பதா?! எனில் உபதேச உந்தியாரில்,

மனதின் உருவை மறவாது சாவ
மனமென ஒன்றில்லை உந்திபற
மார்க்கம் நேரார்க்குமே உந்திபற

என்பார் ரமணர்.

மனதிற்கு உருவம் இல்லை. ஆக மனதின் உருவம் எது? என உள்முகமாக விசாரித்தால் மனம் என ஒரு பொருள் இல்லை என்பது தெளிவாகும். இது

எல்லோருக்கும் உகந்த நேரானமுக்தி வழி என மிக எளிமையாக உபதேசித்து அருளினார்.


மானுட வாழ்க்கையில், அறிவுஅறியாமை இன்பம் துன்பம், பயம்துணிவு, இனிப்புகசப்பு இவற்றில் நல்லதையே விரும்புகிறோம். விரும்புவது நல்லது என்றும் : வெறுப்பது தீயது எனவும் வகைப்படுத்திக் கொள்கிறோம். விருப்புவெறுப்பு இன்றேல் நல்லதும் இல்லை: கெட்டதும் இல்லை. உள்ளது மட்டுமே இருக்கும். இருமை வகையைத் தெரிந்து தெளிதலே தவமாகும். இருவினை ஒப்பு என்பதும் நடுவுநிலை நிற்றலேயாகும்.

ஞானிகளுக்கு நடுவுநிலை நிற்பதே அழகு எனக் கூறுவார் வள்ளுவர்.

கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. *(115)*
சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. *(118)*

நடுவுநிலைக்கு நெஞ்சம் கோடாமை அதாவது சார்பின்றி வாழ்தல், ஓரவஞ்சகம் இல்லாது ஒழுகுதலாகும். இதற்கு எடுத்துக்காட்டாக தராசுக் கோலை அற்புதமான உவமையாகக் கொடுத்துள்ளார். தராசுக்கோல் நடுநிலையில் நிற்கும் போதுதான் சரியான எடையை எடுத்துக்காட்டும். உறவு பகை என எதையும் கருதாது எல்லோரிடமும் நடுவு நிலையில், ஒழுகுபவர் பாரபட்சம் நீங்கிய அளவு மனிதன் தெய்வமாகிறான். திருமூல நாயனார், நடுவு நிலையில் தானும் இருப்பதாகக் கூறும் திருமந்திரப் பாடல் இதோ

நடுவு நின்றார் சிலர் ஞானிகளும் ஆவர்
நடுவு நின்றார் சிலர் தேவரும் ஆவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனும் ஆவர்
நடுவு நின்றாரொடு நானும் நின்றேனே.



திருவள்ளுவரின் குறள், திருமூலரையும் இப்படிப் பாடும்படி செய்துள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது.

மனவிருத்தியினால் விளையும், அறிவுஅறியாமை, பாவம்புண்ணியம், நன்மைதீமை முதலியவை இருமை வகை செயல்களாகும். ஆகனச் சார்பு நீங்கியபோது இரு வினைகளும் அற்றுப்போகிறது. சார்பின்றி நடுவு நிற்பவரே நிறை ஞானி எனப் போற்றுகிறோம். உய்ய வந்ததேவ நாயனாரின் திருக்களிற்றுப் படியாரிலும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாம் சார்பு
கெட ஒழுகின் நல்ல சமாதியுமாம்.

ரமணபகவான் அவர்கள் அன்பு, பரிவு காட்டாத உயிரினங்களே இல்லை எனலாம். பசு, அணில்,

நாய், மான், பறவை, மரம், செடி, கொடி எனப் பட்டியல் நீளும். எல்லோரும் ஓர்நிறை, எல்லோரும் ஓர்குலம் என யாவற்றையும் தன் பிரதி பிம்பமாகவே கண்டார். அவர் அன்பின் வடிவமாக, அறிவின் சொரூபமாக 54 ஆண்டுகள் நம்முன் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியது அற்புதமோ, அதிசயமோ இல்லை. வாழையடி வாழையாக பக்தி, அன்பு நெறியில் ஞானத்தால் உறைந்து நிற்கும் தமிழ் மண்ணின் சாரமே அதுதான். பகவானின் தூலவாழ்வு குறள்நெறிப்படியே அமைந்துள்ளது கண்டு ஆனந்தம் அடைகிறோம். முடிவாக

ஒத்த தறிவோன் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (214)
உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு

இவையனைத்தும் உணரத்தக்கதாய் உள்ளது. மனம் ஒன்று. அதில் எழும் சிந்தனைகள் பல கோடி. எல்லாக் கடமைகளையும் முடித்தபின் கடைசியில் தன்னை அறியும் கடமைக்கு வரலாம் என எண்ணுவது கடலில் அலை ஓய்ந்தபின் குளிக்கலாம் என எண்ணுவது போலாகும். மேலும் அன்பர்கள் வாசகா ஞானம் பேசி நடைமுறையில் உள்ள சிரவணம் ஜபம் முதலிய சாதனைகளைக் கைவிடாது, அனுசயப்பட்டு அது, இது என எண்ணாது கனிமனத்தோடு கண்களில் நீர்மல்கி நம்புனிதன் பகவானின் பொன்னார் திருவடிகளை வணங்கி உய்வோமாக.

அன்பருக்கு அன்பு ஆன மெய்யன் - ஐயன்
ஆனந்த மோனன் அருள் குருநாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான்
என்னைத் தான்அறிந்தேன் மனம்தான் இறந்தேனே
சங்கர சங்கர சம்பு

(தாயுமானவர் பாடல்)

# அக்ஷர மணமாலை
# ஒரு தத்துவக் கருவூலம்

## *டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்*

### *பகுதி10*

*பற்றை ஒழித்தலே பிரம்மத்தை அடையச் சிறந்த சாதனம். இதற்கு ஞானமும் பக்தியுமே ஏற்ற சாதனங்கள். இவற்றுள் பக்தி எளிதான மார்க்கம். கலியில் சாமானியனுக்கு சாத்தியமானது. இது பற்றி ஆராய்கையில், பக்தியின் நவலக்ஷணங்கள் எனக் கீழ்க்கண்டவை ஸ்ரீமத் பாகவதத்தில் குறிக்கப் பட்டுள்ளன*

*ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத சேவனம்*

*அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம்*

*இந்த ஒன்பது குணங்களானவை வருமாறு. இறைவனின் குணங்களைக் கேட்டல்; அதைப் பாடிப் பரவசமடைதல்; அக்குண விசேஷங்களை அனவரதமும் பசு அசை போடுதல் போல நினைவு கூறுதல்; அவன் திருவடிகளை ஆராதித்தல்; பரிபூரண சிரத்தை மற்றும் பக்தியுடன் வணங்குதல்; அவனுக்கு நாம் அடிமை என்று உணர்ந்து ஆட்பட்டுக் கிடத்தல்; அவனை அந்நியனாகக் கருதாமல் அவனுடன் நட்போடு இருத்தல்; கடைசியாக நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணித்தல். இந்த 9 குணங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவற்றைச் சற்று ஆராயலாம்.*

*நாம சங்கீர்த்தனம் பக்திக்கு ஏற்ற முறை. ஆனால் ஒரு கேள்வி எழுகிறது. இறைவனுக்கு உருவமோ நாமமோ*

கிடையாது. இவன் இந்த எல்லை நிலங்களுக்கு அப்பாற்பட்டவன். பின் அவனுக்கு எதற்குப் பல்வேறு நாமங்கள் சூட்ட வேண்டும்? பல உருவங்களைக் கொண்டவனாயினும் அவன் தெளிவாக அறிய ஒண்ணாதவன் என்றே நம் தோத்திரங்கள் கூறுகின்றன. (அநேக மூர்த்திரவ்யக்த:). திருவாசகத்திலும் இந்த நாமத்தைப் பற்றிய கேள்வி வருகிறது.

ஒரு நாமம் ஓர் உருவமொன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ

ஆனால் ஒவ்வொரு நாமத்திற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரு குணத்தைக் குறிக்கும். ராமனை அவனுடன் இருந்தவர்கள் எப்படி அழைத்தனர் என்பதற்கு ஒரு விளக்கம். பல ஆண்டுகளுக்குப் பின் தசரதனுக்குக் குழந்தை பிறக்கிறது. அதுவே பெரிய கோலாகலம். அதுவும் மிக வசீகரமான அழகிய சிசு. அதன் அழகைக் கண்டு உலகியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட முனி சிரேஷ்டரான குல குரு வசிஷ்டரே மோகித்துப் போனாராம். அதனால் இவன் அனைவரையும் ரமிக்கச் செய்வான் என்ற கருத்தில் 'ராமன்' என்று பெயர் சூட்டுகிறார். (வபுஷா தஸ்ய சோதித: என்கிறான் காளிதாசன்). விஸ்வாமித்ரரும் அவனைத் துயில் எழுப்புகையில் 'கௌசல்யா சுப்ரஜா ராமா' என்றே அன்புடன் விளிக்கிறார்.

தந்தை தசரதரோ பல ஆண்டுகளுக்குப் பின் பிறந்த அந்தச் செல்லக் குழந்தைக்கு எந்த வித ஆபத்தும் வரக் கூடாதே என்ற பாசக் கவலையில் 'ராமபத்ர' என்று அழைக்கிறார். இது வால்மீகியின் வாக்கில் அடிக்கடி பார்க்கலாம். இடரோ துன்பமோ வரும் சமயங்களில் 'பத்ரம் தே' என்ற ஆசீர்வாத சொல்லைக் காணலாம். அதனால் அவனுக்கு ஒரு காப்பாக 'ராமபத்ர' என்ற நாமம். தாயான கோசலைக்கும் மற்றுமுள்ள அரசவைப் பெண்டிருக்கும் அந்தக் குழந்தையின் முகம் சந்திரனைப்

போல குளிர்ந்து காணப் பட்டதாம். அதனால் அவனை 'ராமசந்திரன்' என்று அவர்கள் செல்லப் பெயர் சூட்டுகின்றனர். ஊரார் அனைவரும் அவனைப் பிரசித்தி பெற்ற ரகுவம்சத்தின் குல விளக்காக, சக்கரவர்த்தித் திருமகனாகப் பார்த்தனராம். அதனால் அவன் 'ரகுநாதன்' என்றே மக்களால் அழைக்கப் படுகிறான். ஆனால் சீதா பிராட்டிக்கு அவன் தனிப்பட்ட நாயகன். ஆகையால் 'நாதன்' என்று காதலுடன் அழைக்கிறாள். இப்பொழுது அயோத்தியிலிருந்து வடக்கே விதேக நாட்டிற்குச் செல்வோம். அங்குள்ளவர்களுக்கு சீதையின் பேரில் சொல்லொண்ணா அன்பு. அந்த அழகில் சிறந்த ஆரணங்கை, குணக் குன்றான வைதேகியை மணந்ததனால் ராமன் அங்கு 'சீதாபதி' (சீதையின் கணவன்) என்றே குறிப்பிடப் படுகிறான். இந்த ராம நாமங்கள் அனைத்தையும் தொகுத்த ஒரு ஸ்லோகம் எல்லோரும் அறிந்த்து.

ராமாய ராமபத்ராய ராமஸ்சந்த்ராய வேதசே
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம:

ஒவ்வொறு நாமாவிலும் ஒரு பாசப் பிணைப்பைக் காண்கிறோம். பரம்பொருள் நமக்கெல்லாம் அப்பாற்பட்டவன். நமக்கு வேண்டும் வரங்களை அளிக்கும் சக்தி உடையவன். நாம் அசக்தர்கள். அவனை அண்டி நிற்பவர்கள். என்னதான் 'அஹம் பிரம்மாஸ்மி' என்றெல்லாம் சொன்னாலும், அவன் நமக்கு எட்டா உயரத்தில் இருக்கிறான் என்பதே சாதாரண சம்சாரியின் அநுபவம். ஆனால், இவ்வாறு பல்வேறு நாமாக்களால் அழைக்கப் படும்போது பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள தூரம் குறைகிறது. சாக்கிய நாயனாரும் தியாகராஜரும் கண்ட அநுபவங்கள் நம்மை இறைவனின் அருகாமையில் இட்டுச் செல்கின்றன.

பக்தியின் மற்றொரு பரிமாணத்தை இப்பொழுது பார்க்கலாம். மாணிக்கவாசகரின் உள்ளம் பக்தியில்

உருகிய பண்பட்ட ஒன்று. அவர் இறைவனையே சற்று ‘சாமர்த்தியம் குறைந்தவர்’ என்ற கருத்து தொனிக்கும் ஒரு பாடலை இயற்றியுள்ளார். ‘சங்கரன் என்னும் உயர் பொருளை நீ எனக்கு அளித்தாய். அது எல்லை இல்லா இன்பம் தரும் செல்வம்; குறைவற்றது. அதற்கு ஈடாக எதைப் பெற்றாய் நீ? பொய்மையே பெருக்கும் புலையனாகிய என்னையல்லவா? பண்ட மாற்று என்னும் இந்த வணிகத்தில் நீ விலை உயர்ந்த பொருளைக் கொடுத்து மட்டமான சரக்கைப் பெற்றுக் கொண்டாயே. நான் அல்லவா கெட்டிக்காரன்.’ இது ஒரு விதமான இலக்கண வரம்புகளை மீறிய வஞ்சகப் புகழ்ச்சி.

*தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்*
*சங்கரா ஆர்கொலோ சதுரர்?*
*அந்தம் ஒன்றிலா ஆன்ந்தம் பெற்றேன்*
*யாது நீ பெற்றது ஒன்று என்பால்?*

(கோயில் திருப்பதிகம்)

நாம் இதுவரை சுவைத்தது அவன் நாமமும் அவன் குணங்களும் அதன் காரணமாக நாம் அவனால் பெற்ற இன்பமும். இறைவன்பால் அன்பு கொண்டவர்க்கு அவருடைய அழகிய திருமேனியும் அணிகலன்களும் அபயவரத கரங்களும் பெருமகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல், அவருடைய பயமளிக்கும் ருத்திர மயானத் தோற்றங்களும் கூட ஆனந்தத்தையே அளிக்கின்றன. இறைவனின் மயானக் கோலத்தில் மனதைப் பறிகொடுத்தவர் காரைக்கால் அம்மையார். பலனை எதிர்பாராத இந்தப் பக்தை, ‘தனக்கென வாழும் மாந்தர்’ கூட்டத்திலிருந்து மாறுபட்டவர். இறைவன் எனக்கு அருள் புரியாவிட்டாலும், என் துயர் களையாவிடினும், மேலும்மேலும் தொடர்ந்து படரும் நெறியைப் பணிப்பாது ஒழிந்தாரேனும் என் உள்ளத்து அன்பெலாம் இடையறாது அவன் பாலே செல்லும். அதுவும் அம்மையார் கண்ட ஈசன்

*சுந்தர புருஷன் அல்லன். அவன் எலும்பு மாலையை அணிந்தவன்; தீக் கனலைக் கைகளில் ஏந்தியவாறு மயானத்தில் நள்ளிரவில் நடனம் புரிபவன். ஆனால் அற்புதத் திருவந்தாதியில் வரும் அம்மையாரின் இப்பாடல் இறைவன்பால் பயத்தை நீக்கி பக்தியை அளிக்கும். பயபக்தி என்னும் நியதிகள் சாமானியருக்கு. அவர்களுக்கு இன்பம் துய்க்கையிலும் பயம், துன்பத்திலும் பயம் இறைவன்பாலும் பயம். அவர்கள் பக்தியில் பயம் என்னும் உணர்வு இரண்டறக் கலந்துள்ளது. ஆனால் இளமையையும் அழகையும் துச்சமெனத் தூக்கி எறிந்த அந்த மங்கையர்ச் செல்விக்கு, இறைவன் எந்த வடிவத்திலும் அன்பு மயமானவனே. ஆசையினால் ஏற்படும் பயம் என்னும் உணர்வை முற்றிலும் துறந்த அந்த பக்தைக்கு, ஆண்டவனின் ஊழி நடனம் எவ்வித அச்சத்தையும் ஏற்படுத்தவில்லை, என்பது மட்டுமல்லாது, அந்தத் தோற்றத்தையே அவர் விரும்பிப் போற்றினார் என்பது பக்தி மார்க்கத்தின் புதிய பரிமாணம்.*

*என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு*
*அன்பறாது என்னெஞ்சு அவர்க்கு.*

*இதற்கெல்லாம் மாறுபட்ட மற்றொரு வெளிப்பாட்டைக் காண்போம். ஈசன்பால் மாறாத அன்பு கொண்டவன் காளிதாசன். அவன் எழுதிய குமார சம்பவம் பக்திச் சுவையும் காவியச்சுவையும் ஒருங்கே கொண்டது. பார்வதியின் காதலைத் திரஸ்கரித்து, மன்மதனையும் எரித்து விடுகிறார் முக்கண்ணன். அவன் கரம் பற்ற உமை பெரும் தவமியற்றுகிறாள். அவள் காதலைச் சோதிக்க பரமசிவன் பிரம்மச்சாரி உருவில் வருகிறார். வேண்டுமென்றே சிவநிந்தனை செய்கிறார். அவன் அழகற்றவன்; சொத்து சுகம் கிடையாது; பெற்றோர் யார் என்று சொல்ல இயலாது; பயமளிக்கும் தோற்றம்; கிழ எருதின் மீது சவாரி செய்பவன்.*

நீயோ மெல்லியள். அழகு படைத்தவள். உன்னைப் போன்ற இளம் பெண் பதியினிடத்தில் வேண்டும் எந்தக் குணமும் அவனிடம் இல்லையே' என்கிறார் பிரம்மச்சாரி.

பார்வதி இதற்களிக்கும் பதில் அழகு நிரம்பியது. 'உலகத்தின் ஆதியான அவனுக்கு ஏது பெற்றோர்? யார் உற்றோர்? உலகின் செல்வமெல்லாம் அவனுடையதல்லவா. அதனால்தான் எருதின் மீது வரும் அவனைக் கண்டு, ஐராவதத்தில் சவாரி செய்யும் இந்திரனே பணிவுடன் வணங்குகிறானே. பயமளிக்கும் உருவம் அவனுடையது. ஆனால் அவனை அன்றோ சர்வமங்களங்களையும் அளிக்கும் சிவன் என்று அழைக்கிறோம். அந்த உலக நாயகனாகிய பினாகபாணிக்கு குணங்களை நிர்ணயம் செய்ய இயலாதல்லவா?'

*ஸ பீமரூப: சிவ இத்யுதீர்யதே, ந சந்தி யாதார்த்யவிதபினாகின:*

இந்த வர்ணனையை இந்தக் காவியத்தின் 5வது காண்டத்தில் பார்க்கலாம். சிவனின் குறைகளை முதலில் கூறுவது போலச் சொல்லி, அவன் உயர் குணங்களைச் சொல்லும் வாய்ப்பை காளிதாசன் பெருகிறான். பக்தி காவியங்களில் காணும் வர்ணனைகளைவிட இந்த இலக்கிய நூல் அதிக அளவில் நம் மனதைக் கவருகிறது.

இவ்வாறு மறைமுகமாகவும் நேராகவும், ஆசாரியனின் அருளாலும், நூலறிவாலும், நம் சொந்த அனுபவங்களாலும் பரம்பொருளைப் பற்றிய அறிவு நம்மில் சிலருக்குக் கிடைக்கிறது. இதை ரமண பகவான் சொல்லும் விதத்தைப் பார்ப்போம்.

சௌரியம் காட்டினை சழக்கு அற்றதுஎன்றே
சலியாது இருந்தாய் அருணாசலா

(அக்ஷரமணமாலை, 38)

சூரத்தனத்தைக் குறிப்பது ‘சௌரியம்’. இறைவன் தன் அருளைப் பலவாறு காட்டுகிறான். நாயன்மார்களின் வரலாற்றையும் திருவிளையாடல் புராணத்தையும் படிப்பவர்களுக்கு இது தெளிவாகப் புலப்படும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான முறையில் அருள்பாலிக்கிறான். புலையனாக, வேடனாக, மண்சுமக்கும் கூலியாளாக, பிரசவம் பார்க்கும் தாயாக இவ்வாறு அநேக முறையில் வந்து அவர்கள் இன்னல் களைந்து நம் உள்ளம் கவர் கள்ளனாக ஆகிறான். அருள் பெற்ற அந்தப் பெருமக்கள் மனத்துயர் நீங்கிப் பரம் பொருளின் பதத்தை அடைகின்றனர். இத்தகைய லீலைகள் நமக்குப் பெரு மகிழ்வை அளிக்கின்றன. ஆனால் பலவித வேஷங்கள் பூண்டு தன் உண்மை வடிவத்தை மறைத்தாலும் அவன் தன் நிலையில் சலியாது அவன் பிரகாசிக்கிறான். அவனுக்கு நம்மால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அவன் குண தோஷங்களற்ற குணாதீதனாக விளங்குபவன். ஆனால் எப்பொழுதும் அவன் நம்மைக் காக்கத் தயாராக இருக்கிறான். துன்பம் வரும்போதும் தோல்வி நேரிடும்போதும் அவனை நாடும் பலர், கேட்டது கிடைத்த பின்னர் அவனை மறந்தும் போகின்றனர். ஆனால் இவ்வாறான மனித சுபாவத்தைக் கண்டு அவன் சலிப்போ கோபமோ அடைவதில்லை. அதனாலேயே ‘சலியாது இருந்தாய் அருணாசலா’ என்று புகழ் பாடுகிறார் ரமணர்.

இவ்வாறு பக்தனுக்காக தன் அருளை இடையறாது அளிக்க அவன் தயாராக இருப்பினும் ஏன் நம் மனம் அவனிடம் ஈடுபட மறுக்கிறது? அதற்குக் காரணம் விஷய சுகங்களில் இருக்கும் கவர்ச்சியும் நம்முடைய பலஹீனமும் ஆகும். சிற்றின்பத்தில் ஈடுபட்டு மோகத்தை அடையும் என் மூச்சை நிறுத்திவிடு என்ற கவியின் கூற்று உற்று நோக்கத் தக்கது. எனக்கு இந்த நீச வாழ்வு வேண்டாம். என்னை அநித்தியமான இந்த

உணர்வுகளிலிருந்து விடுவித்து நீங்காப் பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல் என்பதே சான்றோரின் பிரார்த்தனை.

நாவுக்கரசர் இறைவனுக்கு நெருக்கமானவர்; அவன் சேவையே உயிர் எனக்கொண்டு உழவாரப் படையால் ஆலய சுத்திகரப் பணிக்குத் தன் உடலையும், தெய்வீகப் பாசுரங்களால் தன் நாவையும், பக்தி என்னும் பாவத்தால் தன் உள்ளத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்தவர். 'இவ்வளவு காலம் உன் மகத்துவத்தை அறியாது போனேனே என்னும் ஏக்கம் அவர் உள்ளத்தை வாட்டுகிறது. சமண மதத்தால் ஈர்க்கப் பட்டு சிவ நெறியை மறந்தேனே என்று துயரம் கொண்டு அவர் திருக்கோளிலி என்னும் தலத்தில் பாடும் பாடலை முன்பே பார்த்தோம். அதில் முதல் பாடல் இதை விளக்கும்.

முன்னமே நினையாது ஒழிந்தேன் உனை
இன்னம் நான் உன் சேவடி ஏத்திலேன்
செந்நெல் ஆர் வயல் சூழ் திருக்கோளிலி
மன்னனே அடியேனை மறவலே

இது நமக்கெல்லாம் ஒரு படிப்பினை. புலன் வழி போதல் சுலபமானது. ஒன்றும் செய்யாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருத்தல் தமோ குணத்தின் வெளிப்பாடு. 'நான் இவ்வாறே இருந்தால் என் கதி என்னாகும். அண்ணாமலை அப்பனே, நீ சொல்' என்று ரமணப் பெருமான் வேண்டும் இப் பாடல் மிக எளிய சொற்களால் அமைந்தது.

சோம்பியாய்ச் சும்மா சுகம் உண்டு உறங்கிடில்
சொல்வேறு என்கதி அருணாசலா

(அக்ஷரமண மாலை 37)

இதைச் சற்று வேறு விதமாகப் பார்த்தால், ஒரு வித மாறுபட்ட கருத்தும் கிட்டும். 'சும்மா இருத்தல்' என்பது சித்தாந்த ரீதியாக ஏற்கப்பட்ட ஒன்று.

*சிற்றின்பத்திலிருந்து நீங்கி, பொருளாசையை விலக்கி இருத்தல் பேரின்பத்தை அடைய விரும்புவோருக்கு ஏற்ற சாதனம். இவற்றிலிருந்து விடுபட்டு மனதைக் கட்டுக்குள் வைத்து அந்நிலையில் காரணகாரிய சம்பந்தமற்ற துரிய நிலையை அடைந்தவருக்கு வேறு என்ன வேண்டும், என்ற உள்ளுறைப் பொருளும் கொள்ளலாம். பதவுரை இதற்கு உதவாது.*

*அக்ஷரமண மாலையின் இரண்டு பாடல்களைப் பார்த்தோம். வரிசையில் சிறு மாற்றம். 38ஆவது பாடலை முதலில் வைத்தோம். அதில் இறைவன் கருணை செய்தான், உள்ளிருள் அகன்றது என்ற கருத்தைப் பார்த்தோம். 37ஆவது பாடலில் என் தமோ குணத்தை நீக்காவிடில், என் கதி என்ன என்ற அங்கலாய்ப்பு காண்கிறது. இந்த முன் பின்னான அநுபவத்திற்கு நாவுக்கரசரின் பாடல் விளக்கமாகிறது. இறைவன் அருள் பெற்ற பின்னரும் அவர் 'முன்னமே நினையாது ஒழிந்தேன் உனை' என்று சொல்லும் ஏக்கம், அவர் ஈசன் பாற் கொண்ட மாறாத காதலின் வெளியீடு.*

*இந்த பக்திப் பரவசத்தில் 'நான்' 'எனது' என்னும் சிறுமைக் குணங்கள் ஒழிந்து போகின்றன. எங்கும் எதிலும் இறைவனையே பார்க்கின்றான் அந்தச் சீவன். தாயுமானவர், இந்நிலை பெற்றோரின் பாங்கினைப் 'பராபரக் கண்ணி' என்னும் நூலில் அழகுடன் வருணிக்கிறார்*

***என்னது யான் என்னல் அற்றோர் எங்கு இருந்து பார்க்கினும் நின்***
***சன்னதியாம் நீ பெரிய சாமி பராபரமே.***

***(பராபரக் கண்ணி, 216)***

*அகங்காரம் (யான்), மமகாரம் (என்னது) என்ற இரண்டுமே பேரின்பத்தை அடையவொட்டாது*

*தடுக்கும் தடைக் கற்கள். இதைத் தாண்டி வந்த மகனீயர்கள் ஈஸ்வர சொரூபத்தை உள்ளது உள்ளபடி பார்க்கும் திறன் பெற்றவர் ஆகின்றனர். அவர்கள் எதிலும் அவனையே பார்க்கின்றனர். சைவ சித்தாந்தத்தில் இது அண்டம்பிண்டம் என்னும் சொற்களால் வருணிக்கப் படும். அண்டம் என்பது மிகப் பெரியது. எங்கும் வியாபித்து நிற்பது. பிண்டம் என்பது மிகச் சிறியது. இதுவே யாக்கை என்கிறார் திருமூலர். பெரிய சாமி எனத் தாயுமானவர் கூறுவது அண்டமே. சீவன் எப்பொழுது இதை உணரத் தொடங்குமோ அப்பொழுதே யாக்கை நிலையாமை என்ற உண்மை புலப்படும். அணுவிலும் சிறியோன்; பெரியவை யாவினும் பெரியோன் (அணோரணீயான் மஹதோ மஹீயான்) என்னும் வேதாந்தக் கருத்துக்கு இந்த வரிகள் பொருள் கூறுகின்றன.*

*ரமணரின் இரண்டு மணமாலைப் பாடல்களில் பல தத்துவங்களைக் காண்கிறோம். சீவாத்மா சிற்றின்பப் பற்றை ஒழித்து பேரின்பத்தைப் பற்றி விசாரம் செய்ய வேண்டும். இதைத் தவிர வேறு வழி அதற்குக் கிடையாது. (ந அன்ய: பந்தா வித்யதே அயனாய வேதம்). ஆனால் இந்தப் பாதையில் அடியெடுத்து வைத்தவுடன் அந்தச் சீவனுக்கு ஈசன் தன் அருளைக் காட்டத் தவறுவதில்லை. அவன் அருளால் அந்த ஒளி நம் அந்தகாரத்தை நீக்குகிறது. நாமும் அந்த ஆநந்த ஜோதியில் கலக்கிறோம். (தஸ்ய பாசா சர்வமிதம் விபாதி). நம்முள் இருக்கும் ஆத்மா தன் பயணத்தின் இறுதிப் பயனைப் பெறுகிறது. (ஆகாசாத் பதிதம் தோயம் சாகரம் ப்ரதிகச்சதி) ஆனால் அந்தப் பரம் பொருள் சலனமற்று இருக்கிறது.*

*வேதத்தின் பொருளை எளிய முறையில் கூறுகிறது அக்ஷரமணமாலை.*

# மதில்மேல் அகந்தை

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

ஜீவன் தன்னுடைய உண்மையான முகவரியைத் தொலைத்து விட்டான். எப்பொழுது எங்கே தொலைத்தான் என்பதற்குரிய பதிலோ மிகவும் விசித்திரமானது. காரணம், 'அநாதி' எப்பொழுது என்று சொல்ல முடியாது. பிறகு எங்கே தொலைத்தான் என்றால் அவனிடத்திலேயே அதைத் தொலைத்திருக்கிறான். எல்லாம் இந்த மாயையின் சதுரங்க விளையாட்டு!

சம்ஸாரம் என்ற ஜீவபந்தம் ஏன், எதற்காக எங்கிருந்து வந்தது என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் இல்லை. சாஸ்த்ரம் இவைகளுக்குரிய பதிலாக 'அநிர்வசனீயம்' — வார்த்தைகளால் விளக்கம் தர முடியாது என்ற நிலை ஏற்படும். அதற்குரிய விளக்கமோ நம்மால் புரிந்து கொள்ளப்பட முடியாத நிலையில் இருக்கும். கட்டணத்தைச் செலுத்தி விடுவோம். இல்லையென்றால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் அல்லவா! அதுபோல எப்படியோ பந்தம் வந்து விட்டது. அதை நீக்குவதற்குரிய வழியைப்பார். முயற்சி செய்து ஞானத்தைச் சம்பாதித்துக் கொள். பிரச்சனை விலகிவிடும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இந்த நிலையில் அனைத்துப் பிரச்சனைகளுக்குரிய தீர்வாக நான் யார் என்ற உண்முகத் தேடலை பகவான் ரமணர் உசுப்பி விடுகிறார். கூர்ந்து நோக்கினால் இப்பொழுது நம்மால் அனுபவிக்கப்பட்டுவரும் 'நான்' என்ற உணர்வை எந்தப் பட்டியலில், எந்தப் பிரிவில் சேர்ப்பது என்பது மிகப்பெரிய சிக்கலான விஷயமாக இருக்கிறது.

காரணம் இந்த நான் என்பதை அறிவு ஸ்வரூபமான ஆத்மாவிடம் சேர்க்கலாமா என்றால் முடியாது. காரணம் சுஷுப்தி என்று சொல்லக்கூடிய ஆழ்ந்த உறக்கத்தில் இந்த 'நான்' என்பதைக் காணவில்லை. புற்றுக்குள் பாம்பைப்போல் இந்த நான் என்பது அக்ஞான விருத்தி ரூபமாக, அவித்யா என்று சொல்லக்கூடிய தமோ குண மாயைக்குள் போய் லயமாகிவிடுகிறது. ஆகவே இந்த நான்-ஐ நித்யமான ஆத்மா என்று கருதி விட முடியாது. சரி, இந்த நான்-ஐ அநாத்மா என்று சொல்லி விடலாமா என்றால், உறக்கத்திலிருந்து விழித்து வெளிக் கிளம்பியதும் ஸ்புடமான உணர்வும், துருதுரு என்று நன்றாக பிரகாசத்துடன் விளங்குகிறது. ஆகவே இந்த 'நான்'-ஐ ஜடமான அநாத்மாவுடன் கண்டிப்பாக சேர்க்க முடியாது.

மதில்மேல் பூனைபோல இந்த 'நான்' இருந்து வருகிறது.

பகவான் ரமணர் கூறுகிறார், 'உருவற்ற பேய் **அகந்தை**'.

அவ்வளவு பிரபலமாக யாரும் பேயைப் பார்த்ததில்லை. ஆனாலும் பேயைப் பற்றிய பயம் ஏறக்குறைய அனைவருக்குமே இருந்து வருகிறது. பேய்களுள் பெரிய பேய் இந்த அகந்தை. ஆகவேதான் அகந்தைக்குரிய விசேஷணமாக பேய் என்ற வார்த்தையைப் பகவான் பயன்படுத்தியிருக்கிறார். இந்த அகந்தை என்ற பேய் இல்லையா என்று கேட்டால், அப்படிச் சொல்ல முடியாது. காரணம் நான், நான் என்று நம் அனைவராலும் நன்றாக அனுபவிக்கப்பட்டு வருகிறது. அப்படியென்றால் இந்த அகந்தைப் பேய் இருக்கிறதா என்றால் ஞான விசாரத்தில் இல்லாமல் மறைந்து போய் விடுகிறது.

மதில்மேல் பூனைபோல இந்தப் பக்கமா, அந்தப் பக்கமா என்ற குழப்பத்தில் ஜடப் பொருளான

பிரபஞ்சத்தினிடத்தும் இதைச் சேர்க்க முடியவில்லை. அறிவு ஸ்வரூபமான பிரம்மத்தினிடத்தும் இந்த நான் -ஐச் சேர்க்க முடியவில்லை.

ஆகவேதான் மாயையைக் குறித்தோ, பிரம்மத்தைக் குறித்தோ பகவான் ரமணர் அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளாமல், இவைகளைப் பற்றி விவாதிக்கின்ற 'நான்' யார் என்ற ஒரு விஷயத்தில் மட்டும் அக்கறை காட்டுகிறார்.

உலகத்தை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். பிறகு கடவுளையும் தேடிக் கொண்டிருக்கிறோம். ஒரு பொருளைப் பற்றிய இருவேறான தவறான கருத்து மிகவும் வலிமையாக நம்முடைய புத்தியுள் இடம் பெற்றிருக்கிறது. அதன் விளைவாக 'நான்' என்ற பொய்யுணர்வு தோன்றிக் கொண்டிருக்கிறது. இந்த 'நான்' என்ற உணர்வை பிரபஞ்சத்தோடு நன்றாகப் பொருத்த முடிவதில்லை. ஆகவே எவ்வளவு சிறப்பாக வாழ்ந்தாலும் முழுமையான நிம்மதியை இந்த உலகத்திடமிருந்து பெற முடிவதில்லை. பிறகு இந்த நான்-ஐ ஈஸ்வரனிடம் பொருத்தலாமா என்றால், ஈஸ்வர அஸ்தித்வம் பற்றிய சம்சயம் மிகவும் உறுதியாக இருந்து வருகிறது. ஆகவே இந்த 'நான்'-ஐ ஈஸ்வரன் என்ற ஒரு கருத்தில் முழுமையாகப் பொருத்த முடியவில்லை. மதில்மேல் பூனையாக இந்த 'நான்' என்ற அகந்தை நிலவி வருகிறது.

இந்நிலையில் பகவானின் கண்ணோட்டம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்.

பகவான் ரமணர் கூறுகிறார்: **"தேடினால் ஓட்டம் பிடிக்கும் உருவற்ற பேய் அகந்தை"**

பிரச்சனை என்ன தெரியுமா! நாம் தேடுவதில்லை. நம்மைத் தவிர மற்ற அனைத்தையும் தேடிக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாகவே தற்கவனத்துடன்

நாம் இருப்பதில்லை. எங்காவதுபோய் மண்டையை மோதிக் கொள்ளும்பொழுதுதான் நமக்குத் தலை இருக்கிறது என்பதையே கவனத்தில் கொள்கிறோம்.

ஆத்ம சாதனத்திற்காக ரமணாஸ்ரமம் செல்வோம். பகவானது ஓட்டு ஹால் தியான மண்டபத்தில் நுழைவோம். சிறிதுநேரம் 'நான்' என்ற உணர்வு ஒடுங்கி மன அமைதியுடன் அமர்ந்திருப்போம். பிறகு என்ன செய்வோம்? பிராரப்த கர்மத்திற்கேற்றபடி 'நான்' வெளிக்கிளம்பும். யார் யார் எப்படித் தியானம் செய்கிறார்கள், இவர் துறவியா அல்லது குடும்பியா? மலைக்குமேல் போகலாமா? கிரிவலம் சுற்றலாமா என்று மனமானது தற்கவனத்தை விட்டுவிட்டு புறம்போக்கில் செல்லத் தொடங்குகிறது.

குருவாசகக் கோவையில் முருகனார் கூறுவதைக் கேட்போம்.

*நீ யார் அவன்யார் எனப்புறத்து நீளமனம்*
*போயே வினாவும் அப்போக்கு ஒழிந்தே ஓயாது*
*தான் ஆவலாகத் தனைக்குறித்து தன்னகத்து*
*நான்யார் எனக்கேட்கை நன்று.*

பொருள்: "நீ யார், அவன் யார் என்று மனமானது தொடர்ந்து தேவையில்லாமல் வெளியே சென்று விசாரித்துக் கொண்டேயிருக்கிறது. மாறாக, இடைவிடாமல் ஆர்வத்துடன் தன்னை யார் என்று தன்னைப் பற்றி விசாரிப்பதுதான் மிகப்பெரிய நன்மையைத் தரும்."

த்வைத வாஸனை நன்றாக, த்ருடமாக இருப்பதால் ஆத்ம விசாரத்தின் பெருமை தெரிவதில்லை. சிறிது விவேகம் இருந்தால் போதும். பிரபஞ்ச நடப்புகள் அனைத்துமே நம்மை நமக்குள் உந்தித் தள்ளுவதை புரிந்துகொள்ள முடியும்.

ஒருமுறை பக்தர் ஒருவர் ஏழுமலையானைத் தரிசித்து வந்த விவரத்தைக் கூறினார். சுவாமி

*பிரம்மோற்சவத்திற்கு ஏழுமலையானைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். ஊசிமுனை அளவுகூட இடம் இல்லாத அளவுக்கு ஜனக் கூட்டம். க்ஷண நேரம்தான் பகவானைத் தரிசிக்க முடிந்தது. கடைசியில் கூட்டத்தில் இருந்து தப்பித்து ஒருவழியாக வெளியே வந்ததும்தான் அப்பா என்ற நிம்மதி வந்தது. அதற்கு பகவான் கூறியதாவது, அப்பா.. என்ற அந்த நிம்மதியை உன்னிடத்திலேயே உணருவதற்காகத்தான் அத்தனைக் கஷ்டங்களும். உன்னிடத்தில்தான் கடைசியில் நீ வந்தாக வேண்டும். அங்குத்தான் பரம நிம்மதியாக பகவானுடன் கலந்திருக்க முடியும். அதற்காகத்தான் இந்தப் பிரம்மோற்சவ ஏற்பாடெல்லாம்.*

*பகவான் ரமணரின் தீர்ப்பு அற்புதமானது.*

*கடவுள் மற்றும் உலகத்தை நோக்கிய பயணமானது தன்னிடத்தில் திரும்பும்பொழுது அகந்தை முடிச்சு அவிழ்ந்து விடுகிறது. அப்பொழுது நான் என்ற ஒன்று தான் என்ற ஒன்றாக ஏகமாய் விளங்குவதை உணர முடிகிறது.*

*ரமணரின் புன்னகையுடன் கூடிய கண்ணசைவு என்ன கூறுகிறது தெரியுமா? நீ மதில்மேலுள்ள பூனை அல்ல. காரணம் மதில் என்பதே வெறும் தோற்றம். பிறகு இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்ற பிரிவும் இல்லை, இந்நிலையில் பூனை என்ற குழப்பத்திற்கும் இடமில்லை. இருப்பது 'நான்' என்ற அகண்ட உணர்வு மட்டுமே!*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2018

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 29 | ஞாயிறு | காலை 05.50 | 30 | திங்கள் | காலை 05:50 |
| மே | 28 | திங்கள் | மாலை 06.51 | 29 | செவ்வாய் | இரவு 08.50 |
| ஜூன் | 27 | புதன் | காலை 07.46 | 28 | வியாழன் | காலை 10.47 |
| ஜூலை | 26 | வியாழன் | இரவு 11.54 | 27 | வெள்ளி | இரவு 01.54 |

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## *பொன்னிரையில் பகவான் ரமணர் -1*

*1943-ஆம் வருடம் நெல்லூர் பக்தர் ஒருவரிடமிருந்து ரமண ஜயந்தியைப் பல வருடங்களாகக் கொண்டாடுவதாகவும் அப்பொழுது பகவானுடைய படத்திற்குப் பூஜை செய்வதற்காக சில மந்திரங்களை எழுதி அனுப்பும்படியும் கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தைப் படித்த பகவான் அதை ஜகதீச சாஸ்திரியிடம் கொடுத்தார். இதற்குச் சில காலத்திற்கு முன்புதான் சாஸ்திரி ரமண சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தை எழுதியிருந்தார். ஆனால் அது எங்கோ தொலைந்து விட்டது. எனவே விஷயம் அத்துடன் விடப்பட்டது. இப்பொழுது அதற்காக ஒரு வேண்டுகோள் வரவே சாஸ்திரி மகிழ்ச்சியடைந்து ஆர்வத்துடன் ரமண பூஜா விதானத்தை தயாரிப்பதாகக் கூறி, வேலையைத் துவங்கி விட்டார்.*

*வேலை ஆரம்பித்து விட்டது என்று தெரிந்தவுடன் நெல்லூர் பக்தர்கள் அவ்வப்பொழுது ஞாபகப் படுத்துவார்கள். எனவே சாஸ்திரியாரும் வேகமாக பூஜாவிதானத்தையும், சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தையும் எழுதி முடித்து விட்டார். முடித்த பிறகு பகவானிடம் வந்து, பகவானுக்கு முன் முதன்முதலில் பூஜை செய்ய அனுமதி வேண்டினார். புன்னகைத்துக் கொண்டே பகவான், “இங்கு என்னை உட்கார வைத்து உன்னுடைய பூஜையைத் தொடங்க வேண்டும் என்பது உன்னுடைய விருப்பமா?” என்று கேட்டார். அதற்கு சாஸ்திரி, ‘இல்லை பகவான்! உங்களுக்கில்லை, உங்களுடைய கமலப் பாதங்களுக்கு’ என்றார். வேகமாகக் கால்களை*

இழுத்துக் கொண்ட பகவான், "போதும், போதும்! இந்த அபத்தம்! உன் வீட்டிற்குச் சென்று படத்திற்குப் பூஜை செய். பாத பூஜையுமாச்சு, சிரசு பூஜையுமாச்சு. ஏன் அதெல்லாம் இங்கே?" என்றார். சாஸ்திரி பகவான் அறிவுறுத்தியபடியே வீட்டில் பகவானுடைய படத்தை வைத்து, முதல் பூஜையை நடத்தினார்.

இப்படி பகவான் தனக்கும், தன்னுடைய சிலைகளுக்கும் பூஜை செய்வதை துளிக் கூட விருப்பமில்லாமல் இருந்துள்ளார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் உலகெங்கிலும் உள்ள பக்தர்கள் தங்களுடைய இருப்பிடத்திலே பகவானின் புகைப்படத்தை வைத்து மட்டும் பூஜை செய்யும் வழக்கம் அவர் ஸ்தூல வடிவிலிருந்த காலத்திலிருந்தே நடந்து வந்து கொண்டிருந்திருக்கிறது. திருச்சுழியில் அவர் உதித்த ஸ்ரீ சுந்தர மந்திரம் (1944) , மதுரையில் அவருக்கு ஞானதோயம் ஏற்பட்ட ஸ்ரீ ரமண மந்திரம் (1946), பம்பாய் மாதுங்கா ரமண சத்சங்கம், பாலக்காடு ஸ்ரீ விஞ்ஞான ரமணீய ஆஸ்ரமம் (1947) இன்னும் உலகெங்கிலும் பல இடங்களில் ஸ்ரீ ரமண சத்சங்கம் நடைபெற்று வந்து கொண்டிருப்பதை நாம் அன்பர்கள் மூலமாகவோ, Facebook மற்றும் WhatsApp மூலமாகவோ அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் சில இடங்களில் அன்பர்கள் தங்களுடைய சத்சங்கத்தைப் பற்றிய செய்தியோ அல்லது இருப்பிடத்தைப் பற்றிய முகவரியோ சிறிது கூட வெளி உலகத்திற்கு காட்டிக் கொள்ளாமல் பகவானின் பரிபூரண அருளால் சத்சங்கங்களை நடத்தி வருகிறார்கள். எனவே பகவான் கருணையினால் தன்னுடைய அன்பர்களை தானே இது போன்ற இடங்களுக்கு காந்தம் இரும்புத் துண்டை தன்னுடன் இழுத்து கொள்வதைப்போல் அவர் தன்னுடைய அன்பர்களை அழைத்துக் கொள்வார் என்றே கூறுகின்றனர்.

அப்படிப்பட்ட ஒரு ரமண பக்தரால் மன்னிக்கவும் ஒரு பெரிய ரமண குடும்பத்தால் ஒரு கோவில் நிறுவி அதற்கு ஸ்ரீ ரமண மஹரிஷி ஆத்ம ஞான பீடம் எனப் பெயர் சூட்டி தொடர்ந்து 5 ஆண்டுகளக்கு மேலாக செம்மையாக செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது என்று நான்கு ஆண்டுகளுக்கு முன் எங்களுக்குக் கிடைத்த ஒரு செவிவழிச் செய்தி.

இந்தப் புனிதக் கோவிலைத் தரிசிக்க ஒவ்வொரு முறை பயணத்தை தொடங்கும்போதும் ஏதாவது ஒரு தடை வந்து கொண்டே இருந்தது. முன்னர் கூறியதைப் போல் பகவான் தன் பக்தரை இந்தப் புனித இடத்திற்கு எப்போது எப்படி அழைக்க வேண்டுமென்று அவருக்கு நன்றாகத் தெரியும் என்று மனதைத் தேற்றிக் கொண்டோம்.

அதற்கு ஒரு தக்க சமயத்தை பகவானே ஏற்படுத்திக் கொடுப்பார் என்று காத்துக் கொண்டிருந்தபோது மதுரையைச் சேர்ந்த பகவான் பக்தர்கள் இருவர், தாங்கள் அந்தக் கோவிலின் கும்பாபிஷேகம் முதல் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பகவான் ஜயந்தி, ஆராதனை மற்றும் வருஷாபிஷேகம் ஆகிய நாட்களுக்கு ஒவ்வொரு முறையும் மதுரையிலிருந்து சென்று வருவதாகக் கூறியிருந்தனர். உடனே நாங்களும் அவர்கள் அடுத்த முறை அங்குச் செல்லும்போது உடன் வருவதாகக் கூறியிருந்தோம். அதற்கான நேரத்தையும் பகவானே அமைத்துக் கொடுத்தார். அந்தக் கோவிலை நிறுவியவரின் இல்லத்தில் ஒரு திருமண நிகழ்வு நடக்க இருப்பதாகவும் அதற்கு அவர்கள் செல்ல இருப்பதாகவும் வாய்ப்பு இருந்தால் எங்களையும் உடன் வர அழைத்தனர். கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? உடனே அந்த நண்பரின் காரில் ஒரு பிரதோஷ தினத்தன்று மதிய வேளையில் இனிதே கிளம்பினோம். பயணம் தஞ்சாவூரை நெருங்கிக் கொண்டிருக்கும்

போதுதான் தெரிந்தது தஞ்சையில் குருதேவி ஜானகி மாதாவின் ஆச்ரமத்தை அவர்கள் இதற்கு முன்னர் தரிசித்ததில்லை என்று. உடனே வண்டியை அந்த ஆச்ரம வாயிலை நோக்கித் திருப்பினார்கள். பின்னர் அங்கு பகவானை ஸ்தூல வடிவில் தரிசித்தவரும் 'ஸ்ரீ ரமண விருந்து' மற்றும் 'கைவல்ய நவநீத'த்தின் உரையாசிரியர் (ஸ்ரீ ரமணாஸ்ரம வெளியீடுகள்) திரு.சிவ.தீனநாதன் அவர்களைச் சந்தித்தோம். உடனே எங்களிடம் வருகின்ற ஏப்ரல் 24-ஆம் தேதி ஜானகி மாதாவின் ஆராதனை பத்திரிகையை அளித்தார். பின்னர் சிறிது நேர ஓய்விற்குப் பிறகு வண்டியைக் கிளப்பினோம். அன்று பிரதோஷ தினமாதலால் தஞ்சைப் பெரிய கோவிலின் கோபுரத்தை நமஸ்காரம் செய்து பயணத்தை மேலும் தொடர்ந்தோம். கார் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோவிலை நெருங்கும் சமயம் இருள் சூழ்ந்து கொண்டது.

கரடுமுரடான சாலைகள் வழியாக சென்றுகொண்டிருக்கும் போதுதான் காரை ஓட்டிக் கொண்டிருக்கும் நண்பர் கூறினார் நாம் இப்போது இருள் நீக்கியை (ஸ்ரீ ஜயேந்திரர் அவர்களின் ஜன்ம பூமி) நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று. பின்னர் பயண நேரம் நண்பர் தாம் கல்கத்தாவில் இருந்த சமயம் ஜயேந்திரர் அவர்களைச் சந்தித்த சம்பவங்களைப் பற்றியே இருந்தது. பேசிக்கொண்டே போகும்போது சாலையின் வலதுபுறம் ஒரு பச்சை நிற பகவான் படம் போட்ட ஃபிளக்ஸ் பேனர் எங்களை வரவேற்றது. அப்போது தான் நண்பர் கூறினார், நாம் பொன்னிரையை வந்தடைந்துவிட்டோம் என்று.

இரவு உணவிற்குப் பின் அந்தக் கோவிலை நிறுவுவதற்கு பகவான் கருவியாகப் பயன்படுத்திய சென்னை வானொலி நிலைய முன்னாள் இயக்குனர் (வர்த்தகத் துறை) திரு.R.பாலசுப்ரமணியன் அவர்களுடன் பேச்சைத் தொடங்கினோம். Google Map

-இல் கூட கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் கண்டுபிடிக்கும் அளவிற்கு அவ்வளவு குக்கிராமம். அடிக்கடி மின்சார இணைப்பு துண்டிக்கப்படுகிறது (இருள் நீக்கிக்கு அருகே இப்படி இருள் சூழ்ந்த ஒரு கிராமமா என்று எண்ணும் அளவிற்கு அப்படி ஒரு இருட்டு) தெளிந்த நக்ஷத்திரக் கூட்டம்; ஆங்காங்கே பறவைகளின் சப்தம்; மின்மினிப் பூச்சிகளின் வருகை; காற்றுக்கு அசையும் தென்னைமர ஓலைகளின் சப்தம் என்று பழங்கால கிராமத்தின் அமைப்பு அச்சுஅசலாக அன்றைய இரவில் நண்பரும் நாங்களும் அனுபவிக்க முடிந்தது.

பேச்சு சென்னையை நோக்கி நகர்ந்தது. திரு.R.பாலசுப்ரமணியன் அவர்கள் எங்களைச் சுமார் 41 ஆண்டுகள் பின்னோக்கி அழைத்துச் சென்றார். அவர் அப்பொழுது சென்னை வானொலி நிலையத்தில் எழுத்தாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய மேல் அதிகாரிகள் அவருக்கு இட்ட பணி ‘ஆத்மாவின் சங்கத்தில்’ என்ற ஒரு புதிய நிகழ்ச்சி தயாரிக்க வேண்டுமென்பது. அதற்காக அவர் செல்ல இருக்கும் இடம் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம். திருவண்ணாமலைக்கு இதற்கு முன்னர் அவர் சென்றதே கிடையாது. பகவான் ரமணரைப் பற்றி அன்றுதான் அவர் கேள்வியே படுகிறார். சரி முதன்முதலாக ஒரு பணி கொடுக்கப்பட்டுள்ளது. அதைச் சீரும் சிறப்புமாகச் செய்து முடிக்க வேண்மென்று என்று எண்ணி பணியை தொடங்குகிறார். அப்பொழுது அவருக்குத் தெரியவில்லை இந்த Project அவரின் வாழ்வையே மாற்றி அமைக்கப் போகிறதென்று. ஆனால் இந்த Assignment-க்கு அவருக்கு உடன் வரும் கார் ஓட்டுனரிலிருந்து வீடியோ கேமராமேன் வரை அனைவரும் அவருடன் ஒருவித மனக்கசப்புடன் செயல்பட்டு வந்தவர்கள் (அனைத்தும் பகவானின் சித்தமே) என்று தெரிந்தபின்னும் அவர் எந்தவித யோசனையுமின்றி பயணத்தைத் தொடங்கினார்.

வண்டி சென்னையிலிருந்து திருவண்ணாமலை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியது. செங்கல்பட்டு நகரைக் கடக்கும் போது சாலையோரத்தில் இருந்த ஒரு எருக்கம்பூ செடியில் வண்டு ஒன்று தொடர்ந்து சுற்றி வந்து கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அதைப் படம்பிடிக்க வேண்டுமென்ற எண்ணம் உதிக்கவே கார் ஓட்டுனரை வண்டியை நிறுத்தச் சொன்னார். வேண்டாவெறுப்பாக வண்டியை நிறுத்தினார் அவர். கேமராமேனை அதைப் படம்பிடிக்கக் கூறினார். அவரும் மிகவும் கோபமாக திருவண்ணாமலையில் தான் சூட்டிங்; இங்கு எதற்குப் படம்பிடிக்கக் கூறுகிறார் என்று முணுமுணுத்தபடியே கேமராவை வெளியில் எடுத்துப் படம்பிடிக்கச் சென்றார். (நடக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளும் பகவானின் கட்டளைப்படியே என்று யாருக்கும் அப்போது தெரியவில்லை). இவ்வளவு சம்பவங்களின் நடுவிலும் அந்த வண்டு அந்தச் செடியை விட்டு நகரவே இல்லை. பின்னர் அந்தக் காட்சியைப் படம்பிடித்த பின் அவர்களின் பயணம் திருவண்ணாமலையை நோக்கி நகர்ந்தது. ஸ்ரீ ரமணாச்ரம வாயிற் கதவை அடையும் போது மதியம் 2.00 மணி. அப்பொழுது ஆச்ரமத்தில் மரியாதைக்குரிய திரு. வே.கணேசன் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம். அவர்கள் அனைவரையும் ஆச்ரம பாகசாலைக்கு அழைத்துச் சென்று மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்தார். பின்னர் சென்னை வானொலியிலிருந்து அவர்கள் வந்த காரணத்தை அறிந்தவுடன் நிகழ்ச்சி முடித்து ஆச்ரமத்தை விட்டுப் புறப்படுவதற்குத் தயாராக இருந்த பெங்களூரு ரமணாஞ்சலி குழுவினரிடம் இதைப் பற்றிக் கூறினார் கணேசன். உடனே திருமதி. சுலோசனா நடராஜன் அவர்கள் தன்னுடைய பயணத்தை ரத்து செய்து அவர்களுக்கு என்ன உதவி வேண்டுமோ தாங்கள் செய்து கொடுப்பதாக உறுதியளித்தனர்.

*தற்பொழுது உள்ளதுபோல் ஆச்ரமத்தில் Archives வசதி அப்பொழுது இல்லை. அதனால் அவர்கள் கேட்கும் பகவானின் பழைய புகைப்படம் மற்றும் அந்த நிகழ்ச்சிக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் பொறுமையாகத் தேடி எடுத்துக் கொடுத்துள்ளார் திரு. வே.கணேசன் அவர்கள். மேலும் கந்தாச்ரமம், விருபாக்ஷ குகை போன்ற அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனைத்து சிறப்பு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளனர் ஆச்ரம நிர்வாகத்தினர். நிகழ்ச்சிகள் முடிந்தபின் ஆச்ரமத்தை விட்டுக் கிளம்பும்முன் ஆச்ரம அலுவலகம் அருகில் ஒரு மயில் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்ததைப் படம் பிடித்துள்ளனர். முன்னர் வண்டைப் படம் பிடிக்கும் போது இருந்த கேமராமேனின் மனநிலைக்கும் இப்போது மயிலைப் படம்பிடிக்கும் போது இருந்த கேமராமேனின் மனநிலைக்கும் (உள்ள) வேறுபாடை பகவானைத் தவிர யார் அறிய முடியும்.*

*மேலும் பகவான் மலையிலிருந்து நடந்து வருவது, சாப்பிடுவது போன்ற காட்சிகள் அடங்கிய வீடியோ தொகுப்பு பகவானின் பக்தரான திரு.கே.கே. நம்பியார் அவர்களிடம் இருக்கிறதென்று ஒரு நம்பகத்தக்க தகவல் கிடைத்ததன் பேரில் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள் ராயப்பேட்டையில் நம்பியாரின் இல்லத்திற்கே சென்று வாங்கிவந்துள்ளார்.*

*அனைத்தும் தயாராகி அந்த நிகழ்ச்சி ஆத்மாவின் சங்கத்தில் தூர்தர்ஷனில் ஒளிப்பரப்பானது. அப்பொழுது அந்த நிகழ்ச்சி தொடங்கும்போது அவர்கள் செங்கல்பட்டில் படம்பிடித்த வண்டின் வீடியோவைப் பயன்படுத்தியுள்ளனர். அதாவது பூ எங்கிருந்தாலும் அதைத் தேடி வண்டுகள் வருவதுபோல ஞானம் இருக்கும் பகவானைத் தேடி உலகெங்கிலுமிருந்து மக்கள் வந்து கொண்டிருப்பதாக ஒன்றிணைந்து*

காண்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் நிகழ்ச்சி முடியும் போது நிகழ்ச்சி தயாரிப்பு திரு.பாலசுப்ரமணியன் என்று பெயர் போடும்போது ஆச்ரமத்தில் மயில் தோகை விரித்து ஆடும் காட்சியை இணைத்து ஒளிபரப்பப்பட்டுள்ளது பாலசுப்பிரமணியனுக்கு வாகனம் அந்த மயில் என்ற காரணத்தினாலோ. அனைத்தும் பகவானின் பரிபூரண கருணையினாலே என்று நெக்குருகிக் கூறினார் பாலசுப்ரமணியன் அவர்கள். இந்த ஆச்ரம பயணத்திற்குப் பின் அவர்களின் மனக்கசப்புகள் நீங்கி இனிதே பணியாற்றியுள்ளனர்.

நிகழ்ச்சி மக்கள் மத்தியில் பெரிய வெற்றி பெற்றது. ரமண பகவானின் அன்றாட அசைவுகளை முதன்முறையாக (இன்று You Tube-இல் இந்த வீடியோவை நாம் காணலாம்) அன்று தான் அவர்கள் கண்டுகளித்தனர். பகவான் விதேக கைவல்யம் அடைந்து 27 ஆண்டுகளுக்கு பிறகு இந்தச் சம்பவங்கள் நடந்தது. பின்னர் மறுஒளிபரப்பு செய்யும் அளவிற்குப் பெரிய ஆதரவு கிடைத்தது பகவானின் அருளினாலே அன்றி வேறெதுவுமில்லை.

இந்த இனிமையான நிகழ்வுகளுக்குப் பின் திரு. பாலசுப்ரமணியன் அவர்களை UPSC-இலிருந்து நேர்முகத் தேர்விற்கு வரச் சொல்லி ஒரு அழைப்பு வந்திருந்தது. அங்கு அவருக்கு கேட்ட ஒரே கேள்வி நீங்கள் வானொலியில் சொல்லிக் கொள்ளும்படி என்ன நிகழ்ச்சி செய்தீர்கள் என்று. அவர் செய்த ஒரே நிகழ்ச்சி இந்த பகவான் ரமணரைப் பற்றிய ஆத்மாவின் சங்கத்தில் என்பதைப் பற்றியதே. இதைக் கூறியவுடன் அந்தத் தேர்வாளர்கள் திரு. பாலசுப்ரமணியன் அவர்களைப் பின்னர் அழைப்பதாகக் கூறி அனுப்பிவிட்டனர். வெளியே வந்தவுடன் அவருடைய நண்பர்கள், ‘அவ்வளவுதான், ஏதோ கண் துடைப்புக்குத்தான் உன்னை இந்தக் கேள்வியைக் கேட்டு வெளியேற்றியிருக்கின்றனர்’ என்று

*கூறினார்களாம். அவரும் இதை நம்பி அவருடைய பணியைத் தொடர்ந்தாராம். சரியாக 1 ஆண்டிற்குப் பிறகு அவருக்குப் பணி நியமன அழைப்பு வந்ததாம். இந்த இரு சம்பவங்களை அவர் கூறிக் கொண்டிருக்கும் பொழுது சரியான இருள் சூழ்ந்த தருணம். வயிற்றிற்கு மட்டுமில்லாது எங்களுடைய செவிகளுக்கும் ரமண விருந்தே அளித்துவிட்டார் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள்.*

*1985-ஆம் ஆண்டு சிறுநீரகக் கோளாறால் அவர் பாதிக்கப்பட்டிருந்த பொழுது அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் அவர் அறுவை சிகிச்சை மேற்க்கொண்டாலும் இன்னும் 5 ஆண்டுகள் மட்டும் தான் உயிருடன் இருப்பார் என்றும் உங்களுடைய மனைவி மக்களுக்கு settle செய்ய வேண்டியதை இப்போதே செய்து விடுங்கள் என்றும் கூறினார்களாம். ஆனால் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நாளில் அந்த மருத்தவருக்கு இலங்கைக்கு வேறொரு வேலையாகச் செல்ல இருப்பதால் அவர் வருவது சந்தேகம் என்று மருத்துவமனையில் கூறினார்களாம். ஆனால் திடீரென்று வேலூரிலிருந்து வந்த அதே மருத்துவர் இவரின் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்த பின்னரே இலங்கைக்குச் சென்றாராம். 5 ஆண்டுகள் மட்டும் தான் உயிருடன் இருப்பீர்கள் என்று சொன்னார்கள் மருத்துவர்கள். ஆனால் இந்தச் சம்பவம் முடிந்து 33 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களிடம் நான் இதைப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன் பாருங்கள் என்றார் பாலசுப்பிரமணியன் அவர்கள். அனைத்தும் பகவான் கருணையைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறியவுடன் மின்வெட்டு நீங்கி இருள் அகன்றது.*

*சரி பொன்னிரையில் பகவானுக்குக் கோவில் கட்டியதற்கும் மேலே கூறிய சம்பவங்களுக்கு என்ன தொடர்பு என்று ஒரு சிறிய குழப்பம் வந்தது. ஒரு*

வேளை அவருடைய பணி உயர்வு மற்றும் உடல் உபாதைகள் நீங்கியது பகவானின் செயல்களினால் ஆதலால் பகவானுக்கு ஒரு கோவில் கட்டிவிட்டார் போல என்று நினைக்கத் தோன்றியது. ஆனால் கோயில் கட்டிய காரணத்தை அவர் கூறியது ஒரு சுவையான சம்பவம்!

**(பொன்னிரை பயணம் தொடரும்)**

# இனிவரும் திருநாட்கள்

## 2018

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் | 14 | சனி | தமிழ் வருடப் பிறப்பு |
| மே | 13 | ஞாயிறு | ஸ்ரீபகவானது 68ஆவது ஆராதனை |
| ஜுன் | 7 | வியாழன் | மஹாபூஜை |
| | 24 | ஞாயிறு | பசுலட்சுமி ஆராதனை |
| ஜுலை | 27 | வெள்ளி | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | சனி | அருணை விஜய தினம் |
| அக்டோபர் | 9 | செவ்வாய் | நவராத்திரி விழா தொடக்கம் |
| | 18 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 19 | வெள்ளி | விஜயதசமி |
| நவம்பர் | 6 | செவ்வாய் | தீபாவளி |
| | 13 | செவ்வாய் | கார்த்திகை தீபவிழா தொடக்கம் |
| | 22 | வியாழன் | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 24 | திங்கள் | ஸ்ரீபகவானது ஜயந்தி |

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# வளைந்த வில்லும் பாயும் கணையும்

**கௌதமன்**

நமது வேதாந்த நூல்களில் மனம் என்பது ஒரு வில்லுக்கு ஒப்புமை கூறப்படுகிறது. லலிதா சஹஸ்ர நாமத்தில் ‘மனம்’ என்னும் வளையும் வில்லைக் கையில் ஏந்தியவள் என்று கூறப்படுகிறது. ராமாயணத்திலும் உருவகமாகப் பார்க்கப்படும்போது, ராமன் என்ற பரமாத்மாவைச் சீதை என்னும் ஜீவாத்மா அடைந்து ஒன்றாக வேண்டி மனம் என்னும் வில் வளைக்கப் படுகிறது. ‘வளைக்கப்படுதல்’ என்பது, மடங்கி உள்நோக்கித் திரும்புதலைக் குறிக்கிறது. பகவான் உபதேசிப்பதுபோல, வெளிநோக்கிச் செல்லும் மனதை, மடக்கி, இதயத்தை நோக்கி உள்முகமாகத் திரும்பும்போது ஆத்ம சாட்சாத்காரம் சித்திக்கிறது.

திரும்பி அகந்தனை தினமகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா

இந்த மனம் திரும்புதல் நூல்களைப் படிப்பதாலேயோ, வெறும் நூல்களால் பொதுவாக வராது. இது நூலறிவு எனப்படும். இது மயக்கம்தரும் அறிவு. பகவான் குறிப்பிடுவதுபோல் இந்த ‘நூலறிவு மாலறிவே’ (மால் = மயக்கம்) ஆகும்.

நூலறிவு அறியாப் பேதையேன் என்றன்
மாலறிவு அழித்தருள் அருணாசலா

எவ்வளவுதான் வியாகரணம், சந்தம், வியாக்யானம், கணிதம், விஞ்ஞானம் இவற்றைப் பயின்றாலும் அது பரம்பொருளை அறியும் பேரறிவைத் தராது. எவ்வளவு முறை வேதம் ஓதினாலும், எவ்வளவுதான் கல்வி கேள்விகளில் தேர்ந்திருந்தாலும் அந்தப் பரமாத்மாவே

நமக்கு இரங்கி, பரம ஸ்வரூப ஞானம் அடைதல் இயலாது.

படிப்பும், மதிநுட்பமும் வேறு; இதயத்திலிருந்து இறைவனை அடைய வேண்டும் என்று பொங்கும் பெரும் சிரத்தை வேறு. நம்முள் இந்த விருப்பம் முமுட்சுத்வம் பொங்கினால் இறைவன் பேரருளால் ஸ்வரூப தரிசனம் பெறலாம்.

கடோபநிஷத்தில் நசிகேதனுக்கு யமன் கூறுகிறார்.

*நாயமாத்மா ப்ரவேசனேன லப்ய:*
*ந மேத[4]யா ந ப[3]ஹுனா ஶ்ருதேன*
*யமேவைஷ வ்ருணுதே தேன லப்[4]ய:*
*தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம் (23)*

பலஹீனம் ஆத்ம தரிசனத்திற்குத் தடை. கூர்ந்த அறிவுடன் பலமும் தேவை என்கிறது உபநிஷதம். இங்கே பலம் எனப்படுவது பௌதிக ரீதியான பலம் அல்ல. இது இடையறாத முயற்சியே. ஆத்ம சாதனையைக் குறிக்கிறது.

இந்திரியங்களையும் மனத்தையும் கட்டுக்குள் வைத்து பற்றுக்களை ஒழித்து, பந்தங்களை அறுத்து ஆத்மாவை அறிவதையே குறிக்கோளாகக் கொண்ட இடைவிடாத முயற்சி. இதற்குத் தேவை ஆத்ம பலம், ஆன்மிகப் பயிற்சி, மற்றும் புலனடக்கம்.

உருவேலா வனத்தில் ஆறு ஆண்டுகள் கடும்தவம் செய்த புத்தபிரான், உடலை வருத்தித் தவம் செய்வதால் பயன் ஒன்றுமில்லை என்று கண்டறிந்தார். சரியான முறையில் சிரத்தையுடன், மனத்தை அடக்கி, ஆசைகள் எங்கிருந்து தோன்றுகின்றன. யாருக்கு அவை எழுகின்றன. மனம் எங்கிருந்து உதிக்கின்றது என்று ஒரே நோக்கத்துடன் ஆத்ம விசாரம் செய்தலே பயன்தரும் என்று கண்டறிந்தார். சித்தார்த்தர், ததாகத புத்தராகப் பரிணமித்தார்.

இந்த ஆத்ம சாதனையை முண்டக உபநிஷதம் ஒரு அழகிய உவமையால் விளக்குகிறது. குருவிடம் பெற்ற வேதாந்த ஞானமாகிய ஆத்ம விசாரமே வில். ஆத்ம விசாரம் செய்பவனே வில்லாளி. அவனது ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை தூய மனத்தை, வில்லில் வைத்து நாணை இழுத்து, வில்லை வளைக்க வேண்டும். நாணை இழுத்து வில்லை வளைப்பது என்றால் ஏகாக்கிரமான சித்தத்துடன், குருவிடம் தான் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்தி, உள்முக சாதனையில் ஈடுபடுவது. பரமாத்மாவே, லட்சியம் அல்லது குரு ஆகும். தேர்ந்த வில்லாளி வில்லை வளைக்கும்போது, அம்பும் குறியும் ஒரே நேர்க் கோட்டில் இருக்கும்படி அமைத்து வில்லை வளைத்து அம்பை செலுத்துகின்றான். நேராக அம்பு லட்சியத்தில் பாய்ந்து மறைந்து போகிறது. ஆத்ம சாதனையில் ஈடுபடுபவன் இங்ஙனமே தான் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகக் காண வேண்டும். தியானம் முற்றுப்பெறும் நிலையில் பரமாத்மாவில் ஜீவாத்மா முற்றிலும் வேறுபாடு இன்றி மறைந்து ஒன்றாகி விடவேண்டும்.

அர்ஜுனன் போன்ற சிறந்த வில்லாளி, வில்லை வளைத்து அம்பைச் செலுத்தும்போது, குறியைத் தவிர வேறு ஒன்றையும் அவன் காண மாட்டான். அவன் கண்ணுக்கு கையில் ஏந்திய வில், அம்பு தன்னைச் சுற்றியுள்ள உலகம் அக்கணம் மறைந்து விடும். தான் உடல், மற்ற கரணங்களையும் அவன் மறந்து விடுவான். லட்சியம் ஒன்றே அவன் கண்முன் நிற்கும். அதுபோலவே ஒரே சிந்தனையுடன், உள்முக நோக்குடன் ஆத்ம சாதனையில் ஈடுபடுவோனுக்கு பரமாத்மாவைத் தவிர அனைத்தும் மறைந்துபோய், தன் உள்ளமும் மறைந்துபோய், அத்வைத நிலையில், கரைந்து விடுவான். அத்தகு நிலையில், நல்ல வில்லாளி எய்த அம்புபோல் பாய்ந்து லட்சியத்தை அடைந்து அதிலேயே ஒன்றாவதுபோல், ஆத்ம சாட்சாத்காரம்

பெறுவான். அம்பு லட்சியத்தை அடைந்து அதிலேயே முழுதும் தைக்க, அதனை நன்றாகத் தீட்டிக் கூர்மையாய் வைக்க வேண்டும். அதுபோன்று ஜீவனாகிய மனதை தீவிர சாதனை என்னும் சாணைக் கல்லில் தீட்டிக் கூராக வைக்க வேண்டும்.

*ப்ரணவோ த[4]னு: ஶரோ ஹ்யாத்மா ப்[3]ரஹ்ம*
*தல்லக்ஷ்யமுச்யதே*
*அப்ரமத்தேன வேத்[3]த[4]வ்யம் ஶரவத் தன்மயோ ப[4]வேத்*

என்கிறார் முண்டக உபநிஷத் ரிஷி.

இந்த இறுதி நிலையில் பரம்பொருளில் ஆத்மா ஒன்றிக் கரைவதை பகவான் வேறு ஒரு அழகான உவமையில் விளக்குகிறார்.

*அம்புவில் ஆலிபோல் அன்புருவில் எனை*
*அன்பாய்க் கரைத்தருள் அருணாசலா*

*(அக்ஷரமணமாலை 101)*

ஆலங்கட்டி, தண்ணீரில் முழுதுமாகக் கரைந்து ஒன்றாதல் போன்று உனது அன்புருவில் என்னை அன்பாகக் கரைத்து, என்னை உன்னுடன் ஒன்றாக்குவாய், அருணாசலா!

## ‘ரமணோதயம்’ – நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| கிருஷ்ணா ஸ்வீட்ஸ், கோவை | ரூ.10000 |
| எம். சங்கரன், அடையாறு | 1025 |
| D. ஸ்ரீராம், சென்னை | 550 |
| எஸ். பத்மனாபன், பெங்களூர் | 3500 |

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

*ஆடி அசைந்திடும் ஆனை துதிக்கையாய்*
*நாடிச் சலித்திடும் நம்மனப் பேடிக்கு*
*சங்கிலியாய்த் தந்திடுவீர் சத்வ குணங்களை*
*அங்கொளிரும் ஆன்மா அலர்ந்து....(151)*

*[யானை சும்மா இராமல் எப்போதும் தன் துதிக்கையை அசைத்துக்கொண்டே இருக்கும். அதை ஒருநிலைப் படுத்த, யானைப்பாகம் அதன் கையில் ஒரு இரும்புச் சங்கிலியைக் கொடுத்து விடுவான். அதைப் பற்றியபின் யானை அசையாமல் நிற்கும். அதுபோன்றே, மனித மனமும் விஷய வஸ்துக்களை நாடி அலைந்துகொண்டே இருக்கும். இறைவன்மேல் கொண்ட பக்தியை மனதில் ஆழப்பதித்தால் மனம் அசையாமல் அதையே பற்றி நிற்கும். அசையா மனத்திலே ஆன்ம சாட்சாத்காரம் மலரும்.*

*('மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே' — சிவபுராணம்]*

*உப்புபுளி காரம் உணவில் தவிர்த்திடுவாய்*
*செப்பிறைவன் நாமம், சரணென்று ஒப்படைப்பாய்*
*உன்னையொரு மூர்த்தியிடம் உள்ளே தியானித்து*
*தொன்னைமனம் நெய்யான்மா தொப்பு...(152)*

*காவிய கண்டர் கருணைக்கை தூரிகையால்*
*ஓவியம் போலவர்முன் உட்கார்ந்தார் மேவிய*
*சந்தேகம் ஓய்ந்திட சஞ்சலம் மாய்ந்திட*
*தன்தேக பாவம் தொலைப்பு....(153)*

*[காவ்யகண்டர் பகவான் முன் அமர்ந்தபோது பகவானின் திருக்கண் நோக்கினால் அதுவரை சஞ்சலித்த மனம் சாந்தமாய் அடங்கி தேகபாவம் அழியப்பெற்று, ஆன்மபாவம் எழுந்தது.]*

*இராமனம் வென்று மராமரம் போல்வாழ்*
*பிராமண சாமிபெயர் சீடர் சிறாருரைக்க*
*வேங்கட ராமனுக்கு வேறுபெயர் கண்டரிட்டார்*
*ஈங்கிவர் ஸ்ரீரமணர் என்று....(154)*

*[இதுவரை பிராமண சுவாமி என்று அழைக்கப்பெற்ற பகவானுக்கு, காவ்யகண்டன் 'ஸ்ரீரமணர்' என்று பெயர் சூட்டினார்.]*

*திருவொற்றி யூரில் தவமிருந்த போது*
*உருவொத்து வந்த ரமணர் சிரமொத்தி*
*தன்சாரம் தீட்சையாய் தந்தாராம் கண்டர்க்கு*
*மின்சாரப் பாய்வு முனிக்கு....(155)*

*[திருவொற்றியூரில் காவ்யகண்டர் தவத்தில் மூழ்கி இருந்தபோது, பகவான் அங்கே அருவுருவாய்த் தோன்றி காவ்யகண்டர் தலையில் தன் திருக்கரத்தை வைத்து ஹஸ்த தீட்சை தந்த நிகழ்வு.]*

*சுமாரோர் மாதத்தில் செய்ய நினைத்தகண்டர்*
*உமாசஹஸ்ரம் பெய்தாரோர் நாளில் தமாஷாக*
*"என்ன கணபதி சொன்னது போதுமா"*
*கண்சிமிட்டிக் கேட்டார்சத் குரு....(156)*

*[உமாதேவிமேல் 'உமா சஹஸ்ரம்' என்று ஆயிரம் பாடல்களை எழுத முற்பட்டார் காவ்யகண்டர். அவர் தாமே விதித்திருந்த 20நாள் கெடுவில் உமா சஹஸ்ரத்தினை முடிக்கத் திட்டமிட்டார். ஆயினும் பெரும்பகுதியை எழுதி முடிக்க முடியவில்லை. கடைசி நாளாகிய இருபதாம் நாளன்று இரவு மனம் சோர்ந்திருந்த காவ்யகண்டரின் முன் பகவான் அமர்ந்திருந்தார். அவரது அருட்பார்வை பட்டவுடன், காவ்யகண்டருக்குக்*

*கவிதை பிரவாஹமாகப் பெருகியது. ஆயிரம் பாடல் தொகுதி முற்றுப் பெற்றவுடன் கண்திறந்த பகவான், "நான் சொன்னது அனைத்தையும் எழுதிக் கொண்டீரா?" என்று கேட்டார்!]*

*பச்சையம்மன் கோயில் பகவான் இருக்கையில்
உச்சிமுகர்ந்து சென்றதாம் நட்சத்திரம் இச்சரியை
ஆறுமுறை ஆக அங்கிருந்த சாஸ்திரியார்
ஆறுமுகன்தான் என்றார் அடித்து....(157)*

*விருபாட்ஷி மாடத்து வேழன்மேல் வெண்பா
உருவாச்சு ஓர்நாள் பகவான் திருவாக்கால்
வேடிக்கை வெண்பாவை பாடி கணபதிக்கு
கோடிட்டுக் காட்டியதைக் கேள்....(158)*

பகவான் சொன்ன வெண்பா

*பிள்ளையாப் பெற்றவனைப் பிச்சாண்டி யாக்கியெங்கும்
பிள்ளையாப் பேழ்வயிற்றைப் பேணினீர் பிள்ளையான்
கன்னெஞ்சோ மாடத்துப் பிள்ளையாரே கண்பாரும்
பின்வந்தான் தன்னைநீர் பெற்று....(159)*

*மாடத்துப் பிள்ளையே வேடன் விருத்தனாம்
நாடகத்தில் நீரண்ண னானீர்காண் பூடகமாய்
அன்னைக்(கு) அறிந்தனை பின்னை மறந்தனை
தொன்னைக்குள் நெய்யான தால்....(160)*

*[158-160: விருபாட்சி குகை மாடப் பிள்ளையார்மீது பகவான் பாடிய நகைச்சுவைப் பாடல்: "பிள்ளையாரே! உம்மைப் போன்ற பெருவயிறு கொண்ட மகனுக்கு உணவளிக்க வேண்டியே சிவபிரான் பிட்சாண்டியாகத் திரிகிறார் போலும்! நான் உன்பின் வந்தவன் அல்லவா? என்னையும் பாருங்கள்!"]*

*பெற்றதனால் ஆயபயன் பாமர ஞானிக்கு
கற்றுக் கொடுத்தார் வடமொழி முற்றும்*

*மறந்தகுரு சீடனை மிஞ்சினார் நூல்கள்*
*பிறந்தமொழி தன்னில் பெயர்த்து....(161)*

*[ஸம்ஸக்ருத மொழியின் யாப்பிலக்கணம் கற்றிராத பகவான் காவ்யகண்டரிடம் ஸம்ஸ்க்ருத யாப்பினைக் கற்றுத் தாருங்கள் எனக் கேட்டார். காவ்யகண்டர் விளக்கிய சில மணிகளுக்குள் ஸம்ஸ்க்ருத மொழியில் வெண்பா நடையில் கவிதை யாத்தார் பகவான்!]*

*உபாசித்த வித்தை உடலை வதைக்க*
*கபாலம் அனலாய் கொதிக்க ப்ரபோவென்று*
*கூவிட கண்டருச்சி தீவிடும் குண்டலினி*
*தாவிடச் செய்தார் தணித்து....(162)*

*[காவ்யகண்டர் செய்த குண்டலினி யோகப் பயிற்சிகள் அவர் உடலை அனலாய்த் தகிக்க, "ப்ரபோ! காப்பாற்றுங்கள்" என்று பகவான் திருவடிகளில் வீழ்ந்தார். பகவான் கரம்பட்ட மாத்திரத்தில், அப் பெருங்கனல் தணிந்தது.]*

*ஆன்மீகம் தாண்டிய ஆத்மார்த்த கேள்விக்கு*
*வான்மேகம் போல்பதில் வர்ஷிக்க ''நான்"மீக*
*பாதையைக் கண்டர் பதிவெடுத்து ஸ்ரீரமண*
*கீதையாய் செய்தார் குறித்து....(163)*

*[பகவானின் உபதேசங்களை 'ரமண கீதையாய்' பதிவு செய்தார் காவ்யகண்டர்.]*

*சிவப்பிர காசமென்ற சைவத்துப் பிள்ளை*
*தவப்பிர காசத்தில் தோய்ந்து உவப்புற*
*தானார்வக் கேள்விக்கு தந்த பதில்களால்*
*''நானார்"நூல் தோன்றியதன் நாள்....(164)*

*ஈரேழு கேள்விக்(கு) இவர்பதில் சொல்கையில்*
*ஈரேழு ஏழாம் இவர்வயது மாறாத*
*மோனத் திருந்த மகானன்று மண்ணிலே*
*ஞானத்தைக் கோலம் இழைத்து....(165)*

# அன்னை அழகம்மையார்

அழகம்மை கந்தாச்ரமத்திற்கு வந்த சில நாட்களில் தனக்கும் தனது மகன்களுக்கும் அதாவது பகவான், நாகசுந்தரம் மற்றும் அங்குத் தங்கியிருந்த அன்பர்களுக்கும் சேர்த்து சமைக்கத் தொடங்கினார்.

ஆனாலும் அவளுடைய வாசனாதிகள் என்ற மற்ற தடைகள் இருந்தன. பகவானிடம் அவள் இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டால், பகவான் மெதுவாக அவளைக் கடிந்து கொள்வார். அம்மா! உனக்கு தேக சௌகரியம் வேண்டுமென்றால் இன்னொரு மகனிடம் போய்விடு! மனச்சாந்தி வேண்டுமென்றால் இங்கே இருக்கலாம் என்று கூறுவதுண்டு. எப்படியோ ஆச்ரமத்திலுள்ள கடின வாழ்க்கைக்கு ஏற்றவாறு அவள் தன்னை மாற்றிக் கொண்டாள்.

அழகம்மை போலியான ஆசாரத்தைத் துறந்தவரா யினும் பரம்பரையாக வந்த சில ஆசாரங்களை விடுவதற்குத் தயங்கினார். பகவான் கருணைகூர்ந்து தமது அன்னையின் மனத்திலிருந்த இந்த எண்ணத்தையும் மாற்றி அருளினார். இடையிடையே, நாட்கணக்காக அன்னையுடன் பேசாமலிருப்பார். அன்னை அங்கு இருப்பதைக் கண்டு கொள்ளவே மாட்டார்.

மகரிஷி தன்னுடன் இவ்வாறு பாராமுகமாக பேசாமல் இருப்பதைக் கண்டு மகரிஷியிடம் பொருமியவுடன் பகவான் அவள் மாத்திரமல்ல; எல்லா பெண்களும் தனக்கு அன்னை என்றார். பகவானின் இந்த நோக்கை அழகம்மை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

உண்மை என்னவென்றால் மகரிஷி தன்னுடைய அன்னையின் அறியாமை என்னும் ஆவரணத்தை

*நீக்கும் முக்கியமான ஆனால் கடுமையான கடமையைச் செய்து வந்தார். அதே சமயத்தில் அழகம்மைக்குப் பாரபட்சம் எதுவுமில்லாமலிருப்பது, வைராக்கியம், எதிலும் ஒட்டாமலிப்பது போன்ற ஆன்மீகப் பாதைக்கு வேண்டிய முக்கியமான குணங்களைக் கற்றுத் தந்தார். முன்னரே கூறியதுபோல் அழகம்மை மத சடங்குகளைச் சிறிது அறிந்திருந்தார். காசிக்கும் மற்ற புனிதத் தலங்களுக்கும் யாத்திரை சென்று வந்தார். தட்சணாமூர்த்தி அஷ்டகம் போன்ற சம்ஸ்கிருத ஸ்லோகங்களையும் ஆவுடையக்காவின் பாடல்களையும் மனப்பாடம் செய்திருந்தார். இதுதான் அழகம்மை கற்றறிந்த வேதாந்தப் பாடங்களாகும். ஆனால் தன்னுடைய மகனுடன் தங்கியிருந்த ஆறு வருடங்கள் அவளுக்கு எங்கும் கிடைக்காத அனுபவ ஞானத்தை அளித்தது. பகவானும் அன்பர்களும் நடத்திய வேதாந்த ஞானம் நிறைந்த உரையாடல்களும் மகரிஷியுடைய நடத்தையும் தன்னுடைய அன்பர்களுக்கு முக்தி கைகூட வேண்டி பகவான் கற்றுத் தந்த அடிப்படை உண்மைகளும் அவள் உள்ளத்துள் சிறிது சிறிதாகச் சென்று மாற்றத்தை ஏற்படுத்தின.*

*அன்னையின் ஆசாரத்தைக் கண்டு சிலசமயம் பகவான் எள்ளி நகையாடுவதுண்டு. முருங்கைக் காயும் வெங்காயமும் மோட்சத்திற்குத் தடை என்று வேடிக்கையாகக் கூறுவார். சில சமயம், அம்மா! உன்னுடைய புடவையை யாரோ தொட்டு விட்டார்கள். போயிற்று போயிற்று ஆசாரம் போயிற்று என்று கூறுவார். இவ்வாறு ஒருநாள் தேசூரம்மா கொண்டு வந்த பாலை அன்னை ஆசாரத்தின் பொருட்டு பருக மறுத்ததை உணர்ந்து, நீ பேசாமல் ஆத்துக்கே (மதுரைக்கே) போய்விடு என்று சினந்து கூறியதைக் கண்டோம்.*

*இவ்வாறு பகவான் படிப்படியாக அன்னையின் மனதை மாற்றினார். இந்த உபதேசங்களால் அன்னையும்*

தன்னுடைய இறுதி பற்றுக்கோடாக பகவானைக் கருதி, ‘இறந்தவுடன் என் உடலை முட்புதரில் தூக்கிப் போட்டாலும் பரவாயில்லை ஆனால் என்னுடைய உயிரை உன் கைகளில்தான் விடவேண்டும்’ என்று வேண்டுவார்.

இவ்வாறு அன்னைக்கு பகவான் அறிவுரை கூறியும் அவர் உள்ளத்தில் அருட்சக்தியை செலுத்தியும் படிப்படியாக உலக வாழ்க்கை பந்தங்களிலிருந்து விடுவித்தும் சிறிது சிறிதாக அவர் மனம் சாந்தியடையச் செய்தார்.

தான் இறக்கப் போகின்றோம் என அழகம்மையாருக்கு முன்னரே தெரியுமா என்று பகவானை பக்தர் ஒருவர் கேட்டதற்கு, ஆமாம்! தங்கை அலமேலு புதிதாக வீடு கட்டி கிருகப்பிரவேசம் நிகழ்ச்சிக்கு அம்மாவை அழைத்தபோது என்னை விட்டு இனி எங்கும் போவதில்லை என்று கூறிவிட்டாள். மேலும் என்னை விட்டு எங்காவது சென்றால் அவள் உயிர் அங்கு எங்கேனும் பிரிந்து விடுமோ என்று அச்சப்பட்டாள். என் மடியிலேயே உயிர் விட வேண்டும் என்று ஆசை வைத்திருந்தாள். மேலும் தன் பேரன் வேங்கடராமனை ஒருமுறை பார்க்க வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தாள். அவளுடைய விருப்பப்படியே சிறுவன் வெங்குட்டு கொண்டு வந்து காண்பிக்கப்பட்டான். இவைகளிலிருந்து அம்மாவிற்குத் தான் இறக்கப் போகிறோம் என்ற உணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றார் பகவான்.

மேலும் அன்னை காவியுடை அணியத் தொடங்கினார். பகவானைக் காணவரும் அன்பர்களுக்கு விருப்பு வெறுப்பின்றி விருந்தோம்பல் செய்யத் துவங்கினார். பகவானிடம் அன்பர்கள் கேட்கும் ஆன்மீக கேள்விகளையும் அவர் அளிக்கும் பொருள் பொதிந்த பதில்களைக் கேட்டுணர்ந்தும் பகவானது

அனைத்து வாழ்க்கை நெறிமுறைகளையும் பார்த்தும் அழகம்மாவின் மனது சிறிது சிறிதாக பக்குவமடைந்தது. இவ்வாறு தன்னை ஈன்றாளை பல விதத்தில் ஞானநிலைக்கு கூட்டுவித்தார் பகவான் என்பதை முன்னரே கண்டோம்.

1922ஆம் வருடம் மார்ச் மாத தொடக்கத்தில் அழகம்மையின் உடல்நிலை பலவீனமடைந்தது. படுத்த படுக்கையில் இருந்தார். அவருடைய புடவைகளை நிரஞ்சனானந்த சுவாமி துவைப்பதுண்டு. தனிமையில் அவர் சிரமப்படுவதைப் பார்த்து குஞ்சுசுவாமிகளும் தாயாரின் துணிமணிகளைத் துவைத்துச் சுத்தம் செய்வார். அழகம்மைக்கு மருந்துகள் கொடுத்தும் குணம் ஏற்படாமல் அதிகரித்தது. தமிழ் துந்துபி வருடம் வைகாசி மாதம் முதல் வாரத்தில் அதாவது 1922 மே மாதம் மூன்றாவது வாரத்தில் அழகம்மையாரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு வரவர நிலைமை கவலைக்கிடமானது. மருந்துகள் கொடுக்கப் பட்டன. 24 மணிநேரமும் கவனிப்பு தொடர்ந்தது. பகவான் அன்னையின் அருகிலேயே இருந்தார். பகவான் வழக்கமாக அமர்ந்திருக்கும் வராந்தாவிற்குத் தென்புறம் உள்ள அறையில் படுத்திருந்த அழகம்மைக்கு 195 1922 ஞாயிறன்று காலையிலிருந்தே அதிக சிரமமாக இருந்தது. அன்று விசாக பகுள நவமி தினம். காலையில் வெளியில் சென்று திரும்பிய பகவான் தாயாரின் அருகில் அமர்ந்தார். பகலுணவை அங்கேயே கொண்டு வரும்படி தாயாரை விட்டு அகலாமல் அங்கேயே உணவருந்தினார்.

தன்னுடைய நினைவை இழப்பதற்குமுன் தனக்கு முடிவு வந்து விட்டது என்று உணர்ந்து கொண்ட அழகம்மை பகவானையும் சின்ன சுவாமியையும் அருகில் அழைத்து, சின்ன ஸ்வாமியின் கையை பகவான் கையின் மேல் வைத்து பகவானிடம், ‘இங்கே

பார்! இந்தப் பையனுக்கு நல்லது கெட்டது தெரியாது. உன்னை விட்டு அவனை அனுப்பி விடாதே! அவன்மீது ஒரு பார்வை வைத்துக்கொள். இதுதான் என்னுடைய கடைசி ஆசை' என்று கூறி தன்னுடைய மூன்றாவது மகனை பகவானுடைய ஆதரவில் விட்டு விட்டாள்.

பகவானுக்கு அன்னை தன் உடலை விடும் நேரம் நெருங்கி விட்டது என்பது தெரிந்தது. பகவானும் அன்பர்களும் அவ்வுடலுக்கு செய்ய வேண்டியதெல்லாம் செய்தாகி விட்டது. இயற்கை இப்போது அவ்வுடல்மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. மனித முயற்சியில் செய்ய வேண்டியதெல்லாம் செய்தாகி விட்டது. நடப்பது நடந்தே தீரும் என்று பவளக்குன்றில் அன்னைக்கு உபதேசித்த பகவானுக்கு இனி என்ன செய்தும் அன்னையைக் காப்பாற்ற முடியாது என்று தோன்றியது போலும்! அவருடைய கடமையெல்லாம் அன்னைக்கு முக்தியளித்து ஆன்ம சாந்தியளிப்பதே. தன் கைப்பட்டாலன்றி எதுவும் நடக்காது என்று உணர்ந்த பகவான் அன்று அன்னையின் அருகில் அமர்ந்து தனது வலது திருக்கரத்தினை அவள் இதயத்தின் மேல் வைத்து மற்றொரு திருக்கரத்தை அவளின் உச்சந்தலையில் வைத்தபடி இருந்தார். மாலையில் அவளுக்கு சிறிது மூச்சுத் திணறல் ஏற்பட்டது. ஆனால் பகவானின் வலது கரம் மார்பில் இருந்ததால் அம்மாவிற்குச் சற்று சாந்தி ஏற்பட்டது.

அப்போது அவள் நிலையைப் பற்றி பகவான் கூறுகின்றார். கடந்த பல ஜென்மங்களின் ஆசைகளும் நினைவுகளும் வாசனையாக மேலும் மேலும் பொங்கி வந்தன. ஆனால் அவைகளெல்லாம் என் கைபட்டு உடனுக்குடன் அழிந்து விட்டன. அவள் அப்படியே சென்றிருந்தால் பல ஜென்மங்கள் எடுக்க வேண்டியிருந்திருக்கும். வாசனைகளெல்லாம்

ஒழிந்து ஆழ்ந்த சாந்தி ஆட்கொண்டது. அவள் உயிர் இதயத்தில் ஒடுங்கியதன் அடையாளமாக ஒரு சிறிய அதிர்வு ஏற்பட்டது. இது மணியோசையைப் போன்று இருந்தது. ஆனால் நான் கையை எடுக்கவில்லை. முழுவதுமாக அவள் அடங்கிவிட்டாள் என்று தெரிந்த பிறகுதான் கையை எடுத்தேன். ஏனெனில் முன்னர் பழனிசுவாமியின் மூச்சடங்கும் நேரத்தில் அவர் மேல் வைத்திருந்த கையை எடுத்தவுடன் அவர் உயிர் கண் வழியாக வெளியேறி விட்டது. அதனால் அம்மாவின் பிராணன் இதயத்தில் முழுவதுமாக ஒடுங்கிவிட்டது என்று தெரிந்த பிறகுதான் என் கையை எடுத்தேன்.

இரவு 8 மணிக்கு பகவானை ஈன்றெடுத்த புண்ணியவதியான அழகம்மையாரின் ஆன்மா இதயத்துடன் கலந்து விட்டது. சிறிது நேரம் பகவான் அமர்ந்து விட்டு மௌனமாக எழுந்தார்.

அம்மா முக்தியடைந்ததின் அடையாளமாக அவள் தேகம் தேஜசுடன் ஒளி விட்டது. முகத்தில் சொல்லொணா அமைதி நிலவியது. ஒரு யோகினி தியானத்தில் இருப்பதுபோல் அம்மா இருந்தாள். ஜீவன் முக்தனாகிவிட்ட அம்மையின் திருமேனிக்கு புதுப்புடவை அணிவிக்கப்பட்டு நெற்றியில் திருநீறு பூசி மாலையும் சாற்றி அறைக்கு வெளியே கொணரப்பட்டு திறந்தவெளியில் பத்மாசனத்தில் உட்கார்ந்த நிலையில் வைக்கப்பட்டது.

பகல் முழுவதும் மகரிஷியும் சில அன்பர்களும் உணவருந்தவில்லை. தன்னை ஈன்றாளுக்கு அனாயாசமாக முக்தி கொடுத்து அறையை விட்டு யாதும் நடவாததுபோல் வெளியே வந்த பகவான், அதுவரை உண்ணாமலிருந்த சில அன்பர்களை நோக்கி, தீட்டு ஒன்றும் இல்லை. வாருங்கள் சாப்பிடலாம் என்றார். அங்கிருந்த நாவல் மரத்தடியில் எல்லோரும் சாப்பிட அமர்ந்தார்கள்.

அன்னை இறந்ததற்காக எவ்வித சோகக்குறியும் பகவானது முகத்தில் இல்லை. அதற்குப் பதிலாக தன்னுடைய பெரிய கடமையை நிறைவேற்றிய திருப்தி மட்டுமே அவர் முகத்தில் இருந்தது எனலாம். இதைப்பற்றி ரமணாச்ரம வாசத்தில் கூறும்பொழுது, அம்மா முக்திக்குப் பிறகு என்னுடைய கடமை தீர்ந்தது. எனக்கு இனி எந்தப் பொறுப்பும் இல்லை என்று நினைத்தேன். இப்பொழுது பார்! எவ்வளவு பெரிய பொறுப்பு எனக்கு வந்துவிட்டது. அதாவது தன்னைச் சரணமடைந்த அன்பர்களின் கன்மத்தை நீக்கி ஞானத்தை அளிக்கும் பொறுப்பு தனக்கு அண்ணாமலையார் வைத்துவிட்டார் என்று கூறாமல் கூறினார்.

அன்பர்கள் அனைவரும் சாப்பிட்ட பிறகு யாவரும் ஒன்றுகூடி கலந்தாலோசித்தனர். சில அன்பர்கள் அம்மையாரின் உடலை என்ன செய்வது? சமாதி வைப்பதா எரிப்பதா என்று பகவானைக் கேட்டதற்கு, உங்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். அப்போது கணபதி முனி 1917 ஆம் வருடம் முனியின் மனைவி விசாலாட்சி, பெண் ஞானிகளின் உடலை என்ன செய்வது என்று வினவியபோது பகவான், ஞானத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லை. எனவே பெண் ஞானியின் உடலையும் சமாதி வைக்க வேண்டும் என்று கூறியதை ரமண கீதையிலிருந்து மேற்கோள் காட்டி, ‘ஜீவன் முக்தர்களுக்கு ஆண் பெண் பேதமில்லை. ஜீவன் முக்தர்கள் உடல் இறைவன் உறையும் கோயில். எனவே அதை எரிக்கலாகாது. அம்மாவின் உடலுக்கு சமாதி வைப்பதுதான் முறையானது’ என்றார்.

இந்தச் சமயத்தில் சமாதி வைப்பதற்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் சேகரித்து வைத்துவிட்டு மேலே வந்தார்கள். அன்னையின் உடலைக் கீழே

கொண்டு செல்வதற்கு வேண்டிய மூங்கில்கள் தற்செயலாக நான்கு தினத்திற்கு முன்பே ஆச்ரமத்திற்கு வந்தன. (குஞ்சு சுவாமியும் ராமசாமிப் பிள்ளையும் மலை உச்சிக்கு சென்றபோது அங்கே பெரிய மூங்கில்கள் வெட்டப்பட்டுக் கிடந்தன. அவர்கள் எந்தவொரு காரணமும் இல்லாமல் கீழே கொண்டு வந்தது இப்போது உபயோகப்பட்டது.)

பெருமாள் சுவாமி, ராமகிருஷ்ண சுவாமி, பவளக் குன்று மடாதிபதியாக இருந்த அகண்டானந்தர், குப்புசாமி எனும் பக்தர் இவர்கள் அனைவரும் மூங்கிலில் துணியால் தூளி கட்டி அதில் அம்மாவின் உடலை வைத்து இருவர் இருவராக மாற்றி மாற்றி தூக்கிக் கொண்டு கந்தாச்ரமத்தில் இருந்து இறங்கி பாலி தீர்த்தக் கரைக்கு அருகில் உள்ள ஒரு பெரிய அரச மரத்து மேடையில் அமர்த்தினார்கள். நால்வரும் பலசாலிகள். இவர்களுடன்கூட பகவானும் மற்றவர்களும் வந்தனர். பகவானும் தன் அன்னையின் உடலைச் சுமந்தார் என்று மனவாசி ராமசாமி ஐயர் தன்னுடைய டைரியில் குறிப்பிடுகின்றார்.

தாயாரின் உடலை மேடையில் வைத்து விட்டு பகவானும் மற்றவர்களும் அருகே அமர்ந்திருக்க சமாதி வைக்கும் இடத்தைச் சுற்றி 100 பேர் அமரக் கூடிய அளவுக்கு புதர்கள் அகற்றப்பட்டன. அலமேலு அம்மாள், அவள் கணவர் பிச்சு ஐயர் மற்றும் சில பக்தர்கள் வந்திருந்தார்கள். அழகம்மை முக்தி அடைந்ததை அடுத்து யாருக்கும் சொல்லிப் பெரிது படுத்தாமல் அங்கிருந்தவர்கள் பார்த்துக் கொண்டாலும் இது எப்படியோ வெளியே தெரிந்து விட்டது. செய்தி கேட்டு நேரம் செல்லச் செல்ல பகவான் பக்தர்களும் மற்றும் பொதுமக்களும் திருவண்ணாமலை நகரிலிருந்து வந்து, இவ்வளவு பெரிய ஞானியை உலகுக்கு அளித்த

அப்பெண்மணிக்கு உரிய மரியாதை செலுத்த வேண்டி அங்கே குழுமிவிட்டனர்.

புஷ்பங்களும் பழ வகைகளும் தேங்காய் வத்தி கற்பூரம் முதலியவைகள் வந்து குவிந்திருந்தன. ஒரு பக்கத்தில் நாகஸ்வர இன்னிசையும் மற்றொரு பக்கத்தில் பஜனை கோஷ்டியுமாக இருந்தது. திருமூலரின் திருமந்திரத்தின் விதிப்படி சமாதி கட்டும் வேலையும் நடந்து கொண்டிருந்தது. பத்து மணிக்கு அபிஷேகம் ஆரம்பித்தது. பக்தர்கள் கொண்டு வந்திருந்த பால், தயிர், இளநீர் மற்று முள்ளவைகளை அபிஷேகம் செய்து முடித்து புது வஸ்திரம் உடுத்தி சமாதி வைக்கும் இடத்திற்கு அன்னையின் உடல் எடுத்துச் செல்லப்பட்டது. சமாதி குழியில் விபூதி தர்ப்பைகளை பரப்பி சம்பிரதாயப்படி தாயரின் உடல் கீழே இறக்கப்பட்டது. பகவான் கையில் விபூதியும் கற்பூரமும் கொடுக்கப்பட்டு சமாதி குழிக்குள் பகவான் போட்டதும் மற்றவர்களும் ஆளுக்கொரு பிடி அள்ளிப் போட்டனர். அதற்குமேல் கற்பூரம், வில்வம், செங்கற்பொடி, விபூதி முதலியவைகளைக் கொட்டி நிறைத்து மேலே பலகைக் கல் கொண்டு மூடி லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு நைவேத்தியத்துடன் கற்பூர ஆரத்தி முடிய மணி 12 ஆகிவிட்டது.

மறுநாள் சில பக்தர்களின் யோசனைப்படி பத்தாம் நாள் சமாதி பூஜை செய்ய வேண்டுமென்றும் அதுவரை நித்ய நைவேத்யம் வைக்க வேண்டும் என்று தீர்மானித்தும் அதன்படி சின்ன சுவாமிகளும் இன்னொரு பக்தரும் கந்தாச்ரமத்திலிருந்து நைவேத்தியத்திற்காக அன்னம் எடுத்துக்கொண்டு கீழே சமாதிக்கு வந்து பூஜை செய்து விட்டு பகல் ஆகாரத்திற்கு கந்தாச்ரமம் திரும்பிவிடுவார்கள்.

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### சுந்தரம் ஐயர் தினம்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் தந்தையார் ஸ்ரீசுந்தரம் ஐயரின் நினைவு தினம் 6/3/2018 அன்று ஆச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. தாயார் சந்நிதியில் அன்னாரின் புகைப்படத்திற்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.*

### ஸ்ரீவித்யா ஹோமம்

*ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ வித்யா ஹோமம் நடைபெற்று வருகின்றது.*

*இவ்வாண்டும் 16/3/2018 அன்று ஸ்ரீவித்யா ஹோமம் ஆச்ரமத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.*

*காலை 7 மணிக்குத் துவங்கிய பூஜை மாலை 3 மணிவரை நடைபெற்றது. அதில் நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜைகள் சிறப்பாக நடந்தேறின, இறுதியாக பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு ஸ்ரீரமணேஸ்வர மஹாலிங்கத்திற்கும், மற்றும் மாத்ருபூதேஸ்வரர் மஹாலிங்கத்திற்கும் அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன.*

*'ஸ்ரீ' என்பது லக்ஷ்மிக்குரிய அக்ஷரம். 'வித்யா' என்றால் கலை. இந்த பூஜையைக் கண்ணுற்றால் வாழ்விற்குத் தேவையான செல்வம், வித்தை போன்றவைகளைப் பெறலாம் என்பது ஐதீகம்.*

*வெகு விமரிசையாக நடைபெற்ற இந்த ஹோமத்தில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அன்னை திரிபுர சுந்தரியின் அருளைப் பெற்றனர்.*

# 68ஆவது ஆராதனை விழா செய்திகள்

## 13-5-2018, ஞாயிற்றுக்கிழமை

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஆராதனை விழாவை முன்னிட்டு ஸ்ரீரமணேஸ்வர மஹாலிங்கத்திற்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள், வேதபாராயணங்கள் மற்றும் சிறப்பு அலங்காரங்களுடன் பூஜை நடைபெற உள்ளது. விழாவினை முன்னிட்டு சிறப்பு விருந்தும், ரமண பக்தி இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.*

## ஸ்ரீரமணாலயம், குரோம்பேட்டை

*காலை மங்கள இசை, வேதபாராயணம், அஷ்டோத்திர பூஜைகளுடன் விழா தொடங்க உள்ளது. காலை 9.30 மணியளவில் 'திருவாசக செந்நாவலர்' சத்குருநாத ஓதுவார் அவர்களின் 'ரமண சந்நிதிமுறை' இசைநிகழ்ச்சி நடைபெற உள்ளது. பங்குபெறும் பக்தகோடிகள் அனைவருக்கும் மதியம் 11.30 மணியளவில் சிறப்பு விருந்து பிரசாதமாக வழங்கப்படும்.*

## முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*காலை சிறப்புப் பூஜையுடன் துவங்கி, ராமநாதபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவியர் பங்குபெறும் 'அக்ஷரமணமாலை' பாராயணம் மற்றும் பக்தி இசைநிகழ்ச்சி நடைபெற உள்ளது. சிறப்புப் பிரசாதமாக மதிய உணவு கலந்துகொள்ளும் அனைவருக்கும் வழங்கப்படும்.*

*மேலும் மதுரை ரமண மந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம் மற்றும் சூளைமேடு ரமண சத்சங்கம் போன்ற மையங்களிலும் ஆராதனை விழா 13-5-2018 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.*

## ரமண சத்சங்கம், நங்கநல்லூர்

*இடம்: 13, பொங்கி மடம் தெரு, SIP காலனி, நங்கநல்லூர்*

*13-5-2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு முதல் 8 மணிவரை நடைபெற உள்ளது. மாலை 5*

*மணியளவில் திருவாசகம், 6 மணிக்கு அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெறும். 6.45 மணியளவில் பகவானைப் பற்றி சச்சிதானந்தா அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும்.*

## ஸ்ரீஅருணாசல அட்சரமணமாலை சேவை மையம் கோட்டூர் மலையாண்டிபட்டினம், பொள்ளாச்சி

*பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 68-ஆம் ஆண்டு ஆராதனை 22-4-2018 அன்று பழனி ராஜம்மாள் சங்கரன் தலைமையில் நடைபெறுகிறது. அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் திருவாசகம் முற்றோதல் நடைபெறும். காலை 8 மணிமுதல் 1.30 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெறும். தீபாராதனைக்குப் பின்னர் பிரசாதம் வழங்கப்பெறும்.*

# மஹாபூஜை - அன்னை அழகம்மையார் ஆராதனை - விழா செய்திகள்

## ஸ்ரீ ரமணாச்ரமம்

*பகவானது தாயார் அன்னை அழகம்மையாரின் மஹாபூஜை 7 ஜூன் வியாழக்கிழமையன்று சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. மாத்ருபூதேஸ்வர மஹாலிங்கத்திற்கும், ரமணேஸ்வர மஹாலிங்கத்திற்கும் சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள், விசேஷ பூஜைகள் நடைபெறும். கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதான பிரசாதம் வழங்கப்பெறும்.*

## ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை

*ஸ்ரீமாத்ருபூதேஸ்வரர் மஹாபூஜை, சென்னை குரோம்பேட்டை ரமணாலயத்தில் ஜூன் 7ஆம் தேதியன்று கொண்டாடப்பட உள்ளது. காலை 8 மணியளவில் ஸ்ரீமாத்ருபூதேஸ்வர அஷ்டோத்ர பூஜையுடன் துவங்கி பின்னர் 'திருவாசக' முற்றோதல் மாலைவரை நடைபெறும். மதியம் சிறப்பு அன்னம் பாலித்தல் நடைபெறும்.*

## திரு. ரங்கநாதன்



*அருணாசல வாசியும் பகவானது பரமபக்தருமான திரு. ரங்கநாதன், பிப்ரவரி 8ஆம் தேதியன்று அருணாசல ரமண பதமடைந்தார். அவரது மனைவி ஸ்ரீமதி. சரஸ்வதி ரங்கநாதன் அவர்களின் ரமணபக்தி, திரு. ரங்கநாதன் அவர்களை அருணாசல வாசத்திற்கு இழுத்து வந்தது. கடந்த 15 வருடங்களாக அவர் திருவண்ணாமலையிலேயே வசித்து வந்தார். ஸ்ரீமதி. சரஸா ரங்கநாதன் - ஸ்ரீ ரமணாச்ரம தலைவர் வே.சு. ரமணன் அவர்களின் தங்கை - ஆச்ரமத்தில் வளர்ந்து வந்தவர்.*

*ரங்கநாதன் அவர்கள் 2004 ஆம் வருடம் சிம்ஸன் நிறுவனத்தின் டிராக்டர்கள் உற்பத்தி செய்யும் TAFE நிறுவனத்தில் மேனேஜிங் டைரக்டராக ஓய்வுபெற்றார். சென்னையில் பணிபுரிந்து வந்தபோதே, அவர் ரமண கேந்திர நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார். குழந்தை உள்ளம் படைத்த இவர், சென்னை பள்ளி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற அனைத்து ரமண நிகழ்வுகளிலும் முக்கியப் பங்காற்றினார். 2004-ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரீரமண ரத யாத்திரை நிகழ்விலும் குறிப்பிடத் தக்க பங்காற்றினார்.*

*ஓய்வுபெற்ற பின்னர், ஸ்ரீரமணாச்ரம மருந்தகத்திலும், ஆச்ரமத்திற்கு ஜெனரேட்டர் நிறுவுவதிலும் பெரும் பங்காற்றினார். ஆச்ரம நிகழ்வுகளிலும், சொற்பொழிவுகளிலும், நாராயண சேவை, ஆச்ரம பாராயணம், மற்றும் விழாக்களிலும் சந்தோஷமாகக் கலந்துகொள்வார். சிறிது காலம் கல்லீரல் கோளாறினால் அவதிப்பட்டு வந்த திரு. ரங்கநாதன் இறுதியில் பிப்ரவரி 8ஆம் தேதியன்று அருணாசல ரமண பதமடைந்தார். அன்னாரது மனைவி ஸ்ரீமதி. சரஸா ரங்கநாதன் சென்னை ரமண கேந்திரத்தின் டிரஸ்டி என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு 'ரமண கேந்திரா டிரஸ்ட்' 'ரமணோதயம்' வாயிலாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| **குரோம்பேட்டை, ரமணாலயம்** | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# Seminar on the Life & Teachings of Bhagavan Sri Ramana Maharshi

On Sunday, 6th May 2018
at Tattvaloka Auditorium 76, Eldams Road, Teynampet,
Chennai - 18. Tel : 2432 8124 / 5 / 6

## PROGRAMME

**Sunday : 06.05.2018**

| | | |
|---|---|---|
| 2.45 - 3.10 p.m. | : | **VEDAPARAYANAM** |
| 3.10 - 3.15 p.m. | : | Invocation by<br>**Smt. MEERA BALACHANDRAN** |
| 3.15 - 3.20 p.m. | : | Welcome Address by<br>**Dr. S.RAMMOHAN,** Vice-President<br>Ramanakendra Trust, Chennai |
| 3.20 - 3.40 p.m. | : | "Shri. Krishna, Writer ",<br>**"மனதிற்கப்பால் மகேசன்"** |
| 3.40 - 4.10 p.m. | : | Dr. S. Rammohan, Editor, Ramanodhayam<br>**"தேடாது உற்ற திருவருள்"** |
| 4.10 - 5.00 p.m | : | Tiruppur Shri Krishnan, Editor, Amuthasurabhi<br>**"நான் அறிந்த ரமணர்"** |
| 5.00 - 5.20 p.m. | : | Coffee Break. |
| 5.25 - 6.00 p.m. | : | Special Address by Shri. **ILA GANESAN**, MP |
| 6.00 - 6.45 p.m | : | Shri. **ISAI KAVI RAMANAN**<br>**"யாதுமாகி நின்றாய்"** |
| 6.45 - 7.00 p.m | : | Conclusion |

**MANGALAM**

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

